க்ரைம் நாவல்
இந்தியாவிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் மாத நாவல்
116



ரூ. 10

# நீல நிற நிமிஷங்கள்!

# ஒரு மேகத்தின் தாகம்

2 நாவல்கள்

## ராஜேஷ்குமார்

வணக்கம்! வாசக நெஞ்சங்களே!

இந்த மாத ஃபேக்ஸில் ஒரு வாசக சகோதரி எனக்கு அனுப்பியிருந்த ஒரு கேள்வியும், அதற்கு நான் அளித்த பதிலும் இடம்பெறப் போகிறது. விஷயம் ஆன்மீகம் சம்பந்தப்பட்டது என்பதால் சிலர்க்கு போர் அடிக்கலாம். அவர்கள் மட்டும் அடுத்த பக்கத்துக்கு போய்விடலாம். வாசக சகோதரி எனக்கு அனுப்பியிருந்த கேள்வி இதுதான். என் பெயர் பொற்கொடி. என்னுடைய அப்பா ஒரு நாத்திகவாதி. அம்மாவுக்கும் கோயில், கடவுள் இதிலெல்லாம் அவ்வளவாய் நம்பிக்கை கிடையாது. ஆனால் எனக்கு மட்டும் சிறுவயதிலிருந்தே கடவுள் பக்தி அதிகம். நான் இந்து மதத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும், கிறிஸ்தவர், முஸ்லீம் வழிபாட்டுத் தலங்களுக்கும் போவது உண்டு. எல்லாக் கடவுள்களையும் நினைத்து ஒரு மணி நேரம் தியானம் செய்வதும் உண்டு. இப்படியெல்லாம் நான் கடவுள் பக்தியோடு இருந்தாலும் என் வாழ்க்கையில் நிம்மதியில்லை. சந்தோஷம் இல்லை. இது எதனால்...? நான் கடவுளை வழிபடும் முறை தவறா... அல்லது வேறு ஏதாவது காரணமா...?

வாசக சகோதரி எழுப்பிய இந்த கேள்விக்கு ஆன்மீக பெரியவர்கள் என்ன பதில்களை சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக சில ஆன்மீக புத்தகங்களைப் புரட்டியபோது 'விமலானந்தர்' என்பவர் சொன்ன கருத்துக்கள் அந்த வாசகியின் கேள்விக்குப் பதிலாக அமைந்தது.

"பல்வேறு குணங்களைக் கொண்ட மக்களால் பல பெயர்களில் உள்ள கடவுள் மனிதனின் ஆத்மாவின் ஆத்மாவாக விளங்குகிறார். உலகில் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களின் ஆத்மாவும் கடவுளுடையதேயாகும். நகம், ரோமம் முதலிய உணர்ச்சியற்ற பல அங்கங்களும், உணர்ச்சி மிக்க பல உறுப்புக்களும் மனிதர்களிடம் இருப்பதுபோல் கடவுளிடத்திலும் இருவேறுபட்ட நிலைகள் உள்ளன. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களோடு மனிதனின் மனம், புத்தி, அகங்காரம் இணைந்து கடவுளோடு ஐக்கியமாகி



## கோயமுத்தூரிலிருந்து

# ஃபேக்ஸ்

(தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்)

(2 ஆம் அட்டைத் தொடர்ச்சி)

உள்ளன. எல்லா உயிர்களையும் இணைக்கும் தெய்வீக சங்கிலியே கடவுள். நமது அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நல்ல விஷயத்தோடும் நாம் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் அவை கடவுளிடமிருந்து வந்ததாகத்தான் நாம் நினைக்க வேண்டும். அறிவாளிகளிடம் உள்ள அறிவும் அவரே. வலிமையானவர்களிடம் உள்ள பலமும் அவரே. பெருமை படைத்தவர்களிடம் உள்ள பெருமையும் அவரே! தொடர்ந்து தியானம் செய்தால் பலன் கிடைப்பது உறுதி. தியானம் என்றால் ஏதோ ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில இரண்டு மணி நேரம் உட்கார்ந்து கடவுளை நினைத்துக் கொண்டிருந்தால் போதாது. விழித்திருக்கும் போதும் இடைவிடாது கடவுளை தியானம் செய்து வரவேண்டும். அது உணர்வு பூர்வமாகவும் இருக்க வேண்டும். நாம் சுய லாபத்தையும், சுயநலத்தையும் மட்டுமே நினைத்து தியானம் செய்யக்கூடாது. இந்த கலியுகத்தில் வாழும் மனிதன் மனநிறைவோடு இருப்பது இல்லை. கடவுளைப் பற்றியும் அவனுக்கு மனநிறைவு இருப்பது இல்லை. கடவுள் உண்மையா...? பொய்யா...? நாம் எண்ணியது நடக்குமா... நடக்காதா... என்ற சந்தேக வட்டத்துக்குள்ளேயே உழலுகிறான். இத்தகைய மனம் கொண்டவர்கள் நிம்மதியாக இருக்க முடியாது. சிரத்தையினால்தான் நாம் கடவுளைப் பற்றிய ஞானத்தைப் பெற முடியும். சிரத்தையில்லாத ஒருவன் எவ்வளவு அறிவுள்ளவனாக இருந்தாலும் அனைத்தும் வீணாகிவிடுகின்றன. சிரத்தையுள்ளவனிடம் ஒரு சிறு நெருப்பைக் கொடுத்தாலும் அதை வைத்து காட்டுத் தீயாக மாற்றிவிடுவான். சிரத்தையில்லாதவனிடம் ஒரு தட்டு நிறைய தீ காங்குகளைக் கொடுத்தாலும் அவற்றில் இருந்து நெருப்பை உண்டாக்கமாட்டான். சிரத்தையுள்ளவனே தெய்வத்தை அடையக்கூடியவன்.

ஓ.கே! வாசகர்களே! கேள்வி கேட்ட அந்த வாசக சகோதரி இந்தப் பதிலைப் படித்துவிட்டு தெளிவு அடையட்டும். நீங்கள் இந்த மாத க்ரைம் நாவல் ஸ்பெஷலில் இடம் பெற்றுள்ள இரண்டு நாவல்களையும் படித்துவிட்டு எனக்கு கடிதம் எழுதுங்கள்.

இனி அடுத்த க்ரைம் நாவல் ஸ்பெஷலில் இடம்பெறப் போகும் நாவல் எது என்று பார்க்கலாமா?

**"உன் நிழலும் நான்தானே!"**

இந்த நாவல் ராணி வார இதழில் 2001-ம் ஆண்டில் தொடர்கதையாக வெளிவந்தது. அடுத்த மாதம் உங்கள் கைகளில் தவழப் போகிறது.

மற்றவை அடுத்த ஃபேக்ஸில்.
மீண்டும் என் வணக்கம்!

மிக்க அன்புடன்,
ராஜேஷ்குமார்.

# விளக்கம் ப்ளீஸ்

# விவேக்

★ ஒட்டகச் சிவிங்கியின் குட்டி பிறக்கும்போது எவ்வளவு அடி உயரம் இருக்கும்...?

(ஆர்.உத்ரா ராம், கோவை-5)

★★ ஆறு அடி! பிராணிகளில் ஒட்டகச் சிவிங்கியார் சற்று வித்தியாசமானவர். அவைகளால் கத்த முடியாது. காரணம் தொண்டையில் குரல் நாண்கள் இல்லை. இன்னொரு உண்மை தனக்குப் பின்னால் உள்ள பொருள்களையும் எதிரிகளையும் தன் கழுத்தைத் திருப்பாமலேயே பார்க்கும் ஆற்றல் ஒட்டகச் சிவிங்கிகளுக்கு மட்டுமே உண்டு.

★ இந்த 2005-ல் உலகத்தின் ஜனத்தொகை எவ்வளவு...?

(வி.சுரேஷ்பாபு, பெங்களூர்-56)

★★ தற்போதைய உலக மக்கள் தொகை 630 கோடி. சீனாவும் இந்தியாவும்தான் உலகில் 100 கோடிக்கும், அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட இரு நாடுகள். இவ்விரு நாடுகளும் இப்போது மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. இந்தியாவில் 2001 கணக்கெடுப்பின்படி 102 கோடி பேர் இருந்தனர். இவர்களில் 53 கோடி பேர் ஆண்கள். படித்தவர்கள் எண்ணிக்கை 65 சதவீதம். வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிப்போர் 25 சதவீதம். எய்ட்ஸ் நோய் பாதித்தவர்கள் 53 லட்சம் பேர்.

**போனஸ் நியூஸ்:** இந்த உலகில் ஒரு மணி நேரத்தில் 8 ஆயிரத்து 700 பேர் பிறந்து கொண்டிருக்கிறார்கள். அதாவது ஒவ்வொரு நிமிடத்துக்கும் 146 பேர். ஒவ்வொரு விநாடிக்கும் 2.5 பேர் இந்த உலகில் புதிதாய் சேர்கிறார்கள். இந்தியாவில் ஒரு மணி நேரத்தில் 1800 குழந்தைகள்



பிறக்கிறார்கள். ஒரு நிமிடத்தில் 30 குழந்தைகள். அதாவது 2 விநாடிக்கு 1 குழந்தை.

★ விபத்தில் துண்டான உடல் உறுப்புகளை ஹாஸ்பிட்டலுக்கு எத்தனை மணி நேரத்தில் எப்படி கொண்டு போக வேண்டும்?

(ஜெ.அழகுபாலன், விருதுநகர்)

★★ ஒரு விபத்தில் கைவிரலோ கால் விரலோ அல்லது உடம்பின் ஏதாவது ஒரு பாகமோ துண்டாகிவிட்டால் விபத்துக்குள்ளானவர் அதிர்ச்சியடைந்து மயக்கமடைந்துவிடுவார்கள். பக்கத்தில் இருப்பவர்கள்தான் தைரியமாக செயல்பட வேண்டும். துண்டான பாகத்தை எந்த காரணத்தை முன்னிட்டும் தண்ணீரில் கழுவிவிடக்கூடாது. அந்த பாகம் எப்படி இருக்கிறதோ அதனை அப்படியே எடுத்து சுத்தமான ஓட்டையில்லாத பாலித்தின் பையில் வைத்து, இறுக்கமாகக் கட்ட வேண்டும். அதன்பின்பு அந்த பாலீத்தின் பையைச் சுற்றிலும் ஐஸ்கட்டிகளை வைத்து ஒரு மரப் பெட்டியில் கொண்டு வர வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் ஐஸ்கட்டி அல்லது தண்ணீர் ஆகியவை துண்டான பாகத்துக்குள் நேரடியாக படும்படி வைக்கக்கூடாது. விபத்து நடந்த நிமிஷத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் துண்டான பாகத்தைக் கொண்டு வந்துவிட வேண்டும். ஆனால் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாக கொண்டு வருகிறார்களோ அதற்கு ஏற்றாற்போல் அந்த உறுப்பை மீண்டும் இணைப்பதற்கான சாத்தியம் அதிகமாகும்.

★ பாரீஸில் உள்ள ஈபிள் டவர் (EIFFEL TOWER) எப்போது கட்டப்பட்டது...?

(எஸ்.செல்வசுந்தரம், திருச்சி)

★★ 1889-ம் வருடம் பிரெஞ்ச் புரட்சியின் நூற்றாண்டு விழாவையொட்டி அதனுடைய ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது.

★ நான் ஒரு கிராமத்து இளைஞன். வருமான வரி தாக்கல் பற்றிய அடிப்படை விஷயங்கள் எனக்குப்

ரியும்படி எனக்கு சொல்ல முடியுமா

(டி.பத்ராச்சலம், கொள்ளேகால்)

ர் ஒரு வருஷத்தில் தான் சம்பாதித்த பணம், த பணம் ஆகியவற்றை ஒளிவு மறைவு ல் அரசாங்கத்துக்கு தெரிவிப்பதே வருமான விபரம். ஏற்பட்ட நஷ்டத்தையும் க்கலாம். சம்பளமாகவோ, செய்யும் தொழில் ாகவோ ஒருவர் தனக்கு கிடைத்த வருமானத்தை விக்க வேண்டும். வங்கியில் டெபாஸிட் யப்படும் பணம், ஷேர்மார்க்கெட் பங்குகள் ங்கியிருந்தால் அதைப்பற்றிய விபரம்; சொத்தில் ருந்து கிடைக்கும் வாடகை, விவசாய வருமானம், ாட்டரி மூலம் கிடைத்த பரிசுப் பணம் போன்றவற்றையும் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் வருமானவரி கணக்கை தாக்கல் செய்ய இரண்டு கால அவகாசங்கள் உண்டு. ஜுலை 31. மற்றும் அக்டோபர் 31. நீங்கள் சம்பளம் வாங்குபவராக இருந்தால் ஜுலை 31-ம் தேதிக்குள் கண்டிப்பாக தாக்கல் செய்தேயாக வேண்டும். 40 லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டும் நிறுவனத்தை நடத்தி வருபவராக இருந்தாலோ, வக்கீல், டாக்டர், பொறியாளர், எழுத்தாளர்கள், நடிகர்கள், 10 லட்ச ரூபாய்க்கும் அதிகமாக சம்பாதிக்கும் ஆடிட்டர் போன்றவர்களாக இருந்தால் அக்டோபர் 31-ம் தேதிக்குள் வருமானவரியைத் தாக்கல் செய்யலாம். தொழில் மூலம் வருமானம் ஈட்டுபவராக இருந்தால் '2 டி' என்ற விண்ணப்பத்தையும், சம்பளம் வாங்குபவராக இருந்தால் '2 இ' என்ற விண்ணப்பத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

**போனஸ் நியூஸ்:** யார் யார்க்கு வருமானவரி தெரியுமா? 1) சொந்த வீடு உள்ளவர்கள். 2) சொந்தத்தில் கார் வைத்து இருப்பவர்கள். 3) வெளிநாட்டுக்கு போய் வந்தவர்கள். 4) ஆடம்பர கிளப்புகளில் மெம்பராய் இருப்பவர்கள். 5) செல்ஃபோன் கிரெடிட் கார்டு வைத்து இருப்பவர்கள்.

★ சர்வதேச அளவில் எந்த நாட்டின் பணத்துக்கு மதிப்பு...?

(கி.ஞானசேகரன், ஏழாயிரம் பண்ணை)

★★ குவைத் ரூபாய்க்கு 'தினார்' என்று பெயர். ஒரு தினார் இந்திய ரூபாய் மதிப்பில் 137.50. ஓமான் நாட்டின் ரூபாய் ரியால். ஒரு ரியால் இந்திய ரூபாய் மதிப்பில் 106.50. பிரிட்டனின் ஒரு பவுண்டு இந்திய ரூபாய் மதிப்பில் 74.25. அமெரிக்காவின் ஒரு டாலர் இந்திய ரூபாய் மதிப்பில் 41.85. கனடாவின் ஒரு டாலர் 33 ரூபாய்.

★ புற்றுநோய் ஒரு தொற்று நோயா?

(வி.ரமணிதரன், நாகர்கோவில்)

★★ இல்லை. ஆனால் பரம்பரையில் யாராவது ஒருவர்க்கு இருந்தால் சந்ததிகளுக்கு வர வாய்ப்புகள் உள்ளன. உதாரணத்திற்கு ஒரு பெண் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டால் அந்தப் பெண்ணின் மகளுக்கும் வர வாய்ப்புகள் உண்டு. புற்றுநோயைக் கண்டுபிடிக்க தற்போது மாமோ க்ராம், சிடி, மற்றும் எம்..ஆர்.ஐ. ஸ்கேன், அல்ட்ராசவுண்ட், எண்டாஸ்கோபி போன்ற நவீன உபகரணங்கள் உள்ளன. இருப்பினும் பயாப்ஸி என்ற திசு பரிசோதனை மூலமே புற்றுநோயை உறுதிப்படுத்த முடியும். முன்பெல்லாம் ஒரு சிறிய அறுவைசிகிச்சை மூலம்தான் பயாப்ஸி செய்ய முடியும். ஆனால் இப்போது ஒரு மைக்ரோ ஊசி மூலம் கத்தியின்றி ரத்தமின்றி பயாப்ஸி செய்து சில நிமிடங்களில் புற்றுநோயைக் கண்டுபிடித்துவிடலாம். 'FINE NEEDLE ASPIRATION CYTOLOGY' என்று பெயர்.

**போனஸ் நியூஸ்:** எதிர்காலத்தில் கான்சர் நோயைக் குணப்படுத்தக்கூடிய, கேன்ஸர் வாக்ஸின், ஜீன் தெரபி, போன் மேரோ ட்ரான்ஸ்ப்ளன்டேஷன், அட்வான்ஸ்ட் கீமோதெரபி மருந்துகள், மோனோகுளோனல் ஆண்ட்டிபாடி எனப்படும் மாஜிக் புல்லட் முதலியன புற்றுநோய் மருத்துவத்தின் எதிர்கால நம்பிக்கைகளாகும். 2025-ல் எந்த நோயையும் வெல்லக்கூடிய அளவுக்கு மருத்துவ உலகம் முன்னேறியிருக்கும்.


நீல நிற
நிமிஷங்கள்!
அந்த
வியாழக்கிழமை
நிறைய பனியோடு
விடிந்து கொண்டிருக்க –
அந்தப் பனியையும்
குளிரையும் பொருட்படுத்
தாமல், குளித்து முடித்து – கருநீல
பட்டுச் சேலைக்குள் நுழைந்து
கண்ணாடி முன் நின்று – நெற்றிப்
பொட்டை சரி செய்தபடி இருந்த
பிரமிளா, அறைக் கதவு
தட்டப்படும் சத்தம் கேட்டு,
தாழ்ப்பாளை போய்
விலக்கினாள்.
வெளியே –
வார்டன் அம்மாள்
நின்றிருந்தாள்.
ராஜேஷ்குமார்

பிரமிளா மலர்ந்தாள்.

''குட்மார்னிங் மேடம்.''

''குட்மார்னிங்! என்ன பிரமிளா ரெடியாயிட்டியா?''

''ஆச்சு மேடம்.''

''முகூர்த்தம் எத்தனை மணிக்கு?''

''ஆறரை மணிக்கு.''

''கல்யாணம் ஈச்சனாரி விநாயகர் கோயில்லதானே?''

''ஆமா மேடம்'' என்றவள், ''நீங்களும் என்னோட கல்யாணத்துக்கு வந்தால் ரொம்பவும் சந்தோஷப்படுவேன். ஆனால் நீங்கதான் வரமாட்டேன்னு சொல்லிட்டீங்களே..?'' சிணுங்கினாள்.

''உன்னோட கல்யாணத்துக்கு வரணும்னு எனக்கும் ஆசைதான், பிரமிளா. ஆனால், இந்த ஆஸ்துமா நோயாளிக்கு, வெளியே கொட்டிக் கிடக்கிற பனி சேராதே... நான் கல்யாணத்துக்கு வந்துதான் ஆசிர்வாதம் பண்ணணுமா? இங்கேயே ஆசிர்வாதம் பண்ணிடறேன். கால்ல விழு...''

பிரமிளா விழுந்தாள்.

அவளை அள்ளி எடுத்த வார்டன் அம்மாள் கன்னங்களை வழித்து திருஷ்டி கழித்தாள். ''நீ ஏற்கெனவே கண்ணைச் சுண்டற மாதிரி அழகு. இந்த கருநீலப் பட்டுச் சேலையில் எப்படி இருக்கே, தெரியுமா? உன்னோட அழகுக்கும் அறிவுக்கும் அமோகமா இருப்பே...''

''மேடம்! நம்ம விடுதியில் இருக்கிற பெண்களை நான் கல்யாணத்துக்கு கூப்பிடாததுல உங்களுக்கு ஏதாவது வருத்தமா?''

''சேச்சே! நீ ஏற்கெனவே சொன்ன காரணத்துல எனக்கு உடன்பாடுதான். இந்த கல்யாணத்துக்கு நீ யாரையுமே கூப்பிடாமே இருக்கிறதுதான் நல்லது'' வார்டன் சொல்லிக் கொண்டிருந்தபோதே - விடுதியின் காம்பவுண்டு கேட்டுக்கு வெளியே கார் ஹார்ன் சத்தம் கேட்டது.

பிரமிளா மலர்ந்தாள்.



''மேடம்! அவர்தான் வந்திருக்கார்னு நினைக்கிறேன்.''

''சரி, நீ கிளம்பு! தலைக்கு குளிச்ச ஈரம் இன்னும் ஆறவேயில்லை போலிருக்கே...''

''காரில் போகப் போக ஆறிடும் மேடம்.''

மேஜை மேலிருந்த மல்லிகைப் பந்தை எடுத்து, கூந்தலில் வைத்துக்கொண்டு - வார்டனிடம் தலையாட்டி விடை பெற்றுக்கொண்டு - காம்பவுண்டு கேட்டை நோக்கிப் போனாள்.

விளக்கு எரிந்துகொண்டிருந்த சில அறைகளின் சன்னல்களில் முகங்கள் எட்டிப் பார்த்தன. அவளைப் பற்றிய பேச்சுக் குரல்கள் ரகசியமாய் கசிந்தன.

''டீ... சித்ரா! கல்யாணப் பொண்ணு கிளம்பிட்டா...''

''போறதைப் பாரேன்... ஜில்... ஜில்ன்னு...''

''ஆபீசுல வேலை பார்த்துகிட்டே, மேனேஜர் அழகாயிருந்தா... அவனை வளைச்சு போட்டுக்கிற திறமை எல்லார்க்கும் வந்துடுமா என்ன?''

''எல்லாரையும் கூப்பிட்டு கல்யாணம் பண்ணிக்க அவளுக்கு மூஞ்சி ஏது? அதான் விடிஞ்சு வெளிச்சம் வர்றதுக்குள்ளே... தாலியைக் கட்டிக்கிறதுக்காக ஓடறா...''

மேற்கொண்டு பேச்சுக் குரல்கள் காதில் விழும்முன்பே - பிரமிளா காம்பவுண்டு கேட்டைத் திறந்துகொண்டு வெளியே போனாள்.

கார் காத்திருந்தது.

டிரைவிங் சீட்டில் உட்கார்ந்திருந்த ராம்சேகர், காரின் கண்ணாடி ஜன்னல் வழியே குனிந்து பார்த்து - ''ஹாய்... பிரமிளா...'' என்றான்.

''பத்து நிமிடத்துக்கு முன்னாடியே வந்துட்டீங்க?''

''கல்யாணத்துக்கு - என்னைக் காட்டிலும் காருக்கு அவசரம்... ம்... ஏறு, கல்யாணப் பெண்ணே.''

காரின் கதவைத் திறந்துவிட்ட ராம்சேகர் இருபத்தேழு வயதில் அழகாக இருந்தான். ஆரம்பகால ஜெய்சங்கர் தோற்றம்.

காருக்குள் நுழைந்த பிரமிளா கதவைச் சாத்திக்கொண்டதும் காரைக் கிளப்பினான். தெரு

முனையைத் தாண்டியதும், பிரமிளாவைப் பார்த்துக்கொண்டே சொன்னான்.

''இந்த பட்டுச் சேலையில் நீ எப்படி இருக்கே தெரியுமா?''

''எப்படி?''

''தேவதை மாதிரி...''

''தேவதையை எப்பப் பார்த்தீங்க?''

''மடக்கிட்டியே..?''

''பின்னே... எல்லா ஆம்பிளைக்கும் இப்படி பொய் பேசறதே வேலையா போச்சு. பொண்ணுங்களை வீழ்த்தறதுக்கு... இந்த 'தேவதை' அஸ்திரத்தை ரெடியா வைச்சிருப்பாங்க...''

''அய்யோ... பிரமிளா... இந்தப் பட்டுச் சேலையில உண்மையாகவே நீ ஜொலிக்கிறே. உனக்கு ஏற்கெனவே எலுமிச்சம்பழ நிறம். இந்த கருநீல பட்டுச் சேலை கட்டிக்கிட்டதாலே, அந்த நிறம் இன்னும் தூக்கலா தெரியுது...''

''நீங்க மட்டும் என்னவாம்? சந்தன கலர் சிலாக் சட்டை, பட்டு வேட்டியில் அமர்க்களம் பண்றீங்க...''

''சரி, கொஞ்சம் நெருக்கமா உட்காறேன்...''

''எதுக்கு?''

''குளிருக்கு கதகதப்பா இருக்கத்தான்.''

''கழுத்துல தாலி விழட்டும். உங்க கட்டளைகள் நிறைவேற்றப்படும்.''

''விடுதியில் நிலவரம் எப்படி?''

''வார்டனைத் தவிர - மற்ற எல்லாருடைய கையிலும் சிவப்புக் கொடி. வர்றப்ப கூட விஷம் மாதிரி வார்த்தைகள். சாம்பிளுக்கு ஒண்ணைச் சொல்லட்டுமா?''

''ம்... சொல்லு பார்க்கலாம்.''

''ஆபீசுல வேலை பார்த்துகிட்டே... மேனேஜர் அழகாயிருந்தா... அவரை வளைச்சு போட்டுக்கிற திறமை எல்லார்க்கும் வந்துடுமா என்ன?''

''கமெண்ட் ரொம்பவும் நல்லா இருக்கே?''

''அதைவிட நல்ல கமெண்ட் எல்லாம் நிறைய இருக்கு.''



''சந்தோஷமான இந்த நேரத்துல அதையெல்லாம் சொல்ல வேண்டாம் பிரமிளா. யாரோ எதையோ பேசிகிட்டு போகட்டும்.''

''கல்யாணத்துக்கு நம்ம ஆபீஸ் நண்பர்கள் மட்டும்தானே வருவாங்க?''

''ஆமா.''

''வெளியே யாருக்கும் நீங்க அழைப்பு தரலையே?''

''நீதான் தரவேண்டாம்ன்னு சொல்லிட்டியே..? பெங்களூரில் இருக்கிற என்னோட மாமாவுக்கும் - அத்தைக்கும் மட்டும் போன் பண்ணி விஷயத்தை சொன்னேன். 'சந்தோஷம்'ன்னு ஒத்தை வார்த்தையில பதில் சொல்லிட்டு - பெங்களூர் பக்கம் வந்தால், உன் பெண்டாட்டியை கூட்டிகிட்டு வான்னு சொன்னாங்க.''

''அவங்களுக்கு நம்ம கல்யாணத்துல விருப்பம்தானே?''

''விருப்பமோ... வெறுப்போ... யாரைப் பற்றியும் நாம கவலைபட வேண்டாம், பிரமிளா. கல்யாணத்தை முடிப்போம். நம்ம ஆபீஸ் நண்பர்களுக்கு மட்டும் ஒரு விருந்து கொடுத்துட்டு, வாழ்க்கையை ஆரம்பிச்சுடுவோம்...''

கார் குறிச்சி, சுந்தராபுரம், சிட்கோவைத் தாண்டி, ஈச்சனாரியை நெருங்கியது. ஈச்சனாரி கோயிலின் கோபுர உச்சியிலிருந்து - ஒலிபெருக்கி மூலமாய் - எம்.எஸ்.சுப்புலட்சுமியின் குரல் தேன்பாகாய் இழைந்து வந்தது.

''சுப்புலட்சுமி பாட்டு எனக்கு ரொம்பவும் பிடிக்கும்'' என்றாள் பிரமிளா.

காரை கோவிலுக்கு இடது பக்கமாய் இருந்த காலியிடத்தில் கொண்டுபோய் நிறுத்தினான் ராம்சேகர். அந்நேரத்துக்கே கோயிலில் கும்பல் அதிகமாய் இருந்தது. வேறு ஒரு 'கல்யாணம்' மண்டபத்தில் நடப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் தெரிந்தன. மணப்பெண் நூல் பட்டுச் சேலையில் கரியால் கோடி பூத்த மாதிரி ஜீச்சென்று தெரிந்தாள். கடைவாயில் மிட்டாயை அடக்கிக்கொண்டு, வெட்கத்தோடு சப்பினாள். மண்டப வாசலில் பேச்சுக் குரல்கள.

முனையைத் தாண்டியதும், பிரமிளாவைப் பார்த்துக்கொண்டே சொன்னான்.

''இந்த பட்டுச் சேலையில் நீ எப்படி இருக்கே தெரியுமா?''

''எப்படி?''

''தேவதை மாதிரி...''

''தேவதையை எப்பப் பார்த்தீங்க?''

''மடக்கிட்டியே..?''

''பின்னே... எல்லா ஆம்பிளைக்கும் இப்படி பொய் பேசறதே வேலையா போச்சு. பொண்ணுங்களை வீழ்த்தறதுக்கு... இந்த 'தேவதை' அஸ்திரத்தை ரெடியா வைச்சிருப்பாங்க...''

''அய்யோ... பிரமிளா... இந்தப் பட்டுச் சேலையில உண்மையாகவே நீ ஜொலிக்கிறே. உனக்கு ஏற்கெனவே எலுமிச்சம்பழ நிறம். இந்த கருநீல பட்டுச் சேலை கட்டிக்கிட்டதாலே, அந்த நிறம் இன்னும் தூக்கலா தெரியுது...''

''நீங்க மட்டும் என்னவாம்? சந்தன கலர் சிலாக் சட்டை, பட்டு வேட்டியில் அமர்க்களம் பண்றீங்க...''

''சரி, கொஞ்சம் நெருக்கமா உட்காறேன்...''

''எதுக்கு?''

''குளிருக்கு கதகதப்பா இருக்கத்தான்.''

''கழுத்துல தாலி விழட்டும். உங்க கட்டளைகள் நிறைவேற்றப்படும்.''

''விடுதியில் நிலவரம் எப்படி?''

''வார்டனைத் தவிர - மற்ற எல்லாருடைய கையிலும் சிவப்புக் கொடி. வர்றப்ப கூட விஷம் மாதிரி வார்த்தைகள். சாம்பிளுக்கு ஒண்ணைச் சொல்லட்டுமா?''

''ம்... சொல்லு பார்க்கலாம்.''

''ஆபீசுல வேலை பார்த்துகிட்டே... மேனேஜர் அழகாயிருந்தா... அவரை வளைச்சு போட்டுக்கிற திறமை எல்லார்க்கும் வந்துடுமா என்ன?''

''கமெண்ட் ரொம்பவும் நல்லா இருக்கே?''

''அதைவிட நல்ல கமெண்ட் எல்லாம் நிறைய இருக்கு.''



''சந்தோஷமான இந்த நேரத்துல அதையெல்லாம் சொல்ல வேண்டாம் பிரமிளா. யாரோ எதையோ பேசிகிட்டு போகட்டும்.''

''கல்யாணத்துக்கு நம்ம ஆபீஸ் நண்பர்கள் மட்டும்தானே வருவாங்க?''

''ஆமா.''

''வெளியே யாருக்கும் நீங்க அழைப்பு தரலையே?''

''நீதான் தரவேண்டாம்ன்னு சொல்லிட்டியே..? பெங்களூரில் இருக்கிற என்னோட மாமாவுக்கும் - அத்தைக்கும் மட்டும் போன் பண்ணி விஷயத்தை சொன்னேன். 'சந்தோஷம்'ன்னு ஒத்தை வார்த்தையில பதில் சொல்லிட்டு - பெங்களூர் பக்கம் வந்தால், உன் பெண்டாட்டியை கூட்டிகிட்டு வான்னு சொன்னாங்க.''

''அவங்களுக்கு நம்ம கல்யாணத்துல விருப்பம்தானே?''

''விருப்பமோ... வெறுப்போ... யாரைப் பற்றியும் நாம கவலைபட வேண்டாம், பிரமிளா. கல்யாணத்தை முடிப்போம். நம்ம ஆபீஸ் நண்பர்களுக்கு மட்டும் ஒரு விருந்து கொடுத்துட்டு, வாழ்க்கையை ஆரம்பிச்சுடுவோம்...''

கார் குறிச்சி, சுந்தராபுரம், சிட்கோவைத் தாண்டி, ஈச்சனாரியை நெருங்கியது. ஈச்சனாரி கோயிலின் கோபுர உச்சியிலிருந்து - ஒலிபெருக்கி மூலமாய் - எம்.எஸ்.சுப்புலட்சுமியின் குரல் தேன்பாகாய் இழைந்து வந்தது.

''சுப்புலட்சுமி பாட்டு எனக்கு ரொம்பவும் பிடிக்கும்'' என்றாள் பிரமிளா.

காரை கோவிலுக்கு இடது பக்கமாய் இருந்த காலியிடத்தில் கொண்டுபோய் நிறுத்தினான் ராம்சேகர். அந்நேரத்துக்கே கோயிலில் கும்பல் அதிகமாய் இருந்தது. வேறு ஒரு 'கல்யாணம்' மண்டபத்தில் நடப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் தெரிந்தன. மணப்பெண் நூல் பட்டுச் சேலையில் கரியால் கோடிழுத்த மாதிரி ஈச்சென்று தெரிந்தாள். கடைவாயில் மிட்டாயை அடக்கிக்கொண்டு, வெட்கத்தோடு சப்பினாள். மண்டப வாசலில் பேச்சுக் குரல்கள.

''டே... சம்முவம்! அய்யர் வந்துட்டாரா?''

''இன்னும் வல்ல... வண்டி போயிருக்கு.''

''ஆறரைக்கு முகூர்த்தம்... இப்பவே மணி ஆறு.''

''வந்துடுவாரு.''

''மாப்ள எங்க?''

''அதோ... அந்த வேப்ப மரத்துக்கு பின்னாடி, சிகரெட் புடிச்சிட்டிருக்காரு.''

''விடியற்காலை நாலு மணியிலிருந்து 'மாப்ளை'க்கு இதே வேலையா போச்சு.''

மண்டபத்துக்கு பின்பக்கமிருந்து - சமையல்கட்டில் கிளறும் உப்புமாவின் மணம் காற்றில் மணத்தது.

காரைச் சூழ்ந்தார்கள் ஆபீஸ் நண்பர்கள். டெஸ்ட்பாட்ச் கிளார்க் இரண்டு மாலைகளோடு நின்றார். ராம்சேகரும், பிரமிளாவும் இறங்கினார்கள்.

''எல்லாம் ரெடியா?''

''ரெடி சார்.''

''சீனிவாசன்.''

வயதான ஹெட்கிளார்க் ஓடிவந்தார்.

''இந்தாங்க தாலி. சாமி பக்கத்துல வைச்சு... அர்ச்சனை செய்ய ஏற்பாடு பண்ணுங்க.''

''சரி, சார்.''

அவர் வாங்கிக்கொண்டார்.

''மூர்த்தி! கோயில் நிர்வாக அதிகாரிகிட்டே சொல்லி, கல்யாணம் நடத்தறதுக்கான ரசீது வாங்கிக்கிட்டீங்களா?''

''வாங்கிட்டேன் சார்.''

''உள்ளே போலாமா?''

''கோயிலுக்குள் எல்லாரும் முன்னதாக போக - கடைசியாய் பிரமிளாவும் ராம்சேகரும் தொடர்ந்தார்கள்.

''எக்ஸ்க்யூஸ்மீ...''

தன் காதுக்குப் பக்கத்தில் - மிக மெதுவாய் எழுந்த குரலைக் கேட்டதும், ராம்சேகர் நின்றான். திரும்பிப் பார்க்க அந்த இளைஞன் தெரிந்தான். முகத்தில் தாடி வளர்த்து - கண்களில் சோகத்தை நிரப்பியிருந்தான். கையில் ரிப்பன் சுற்றிய ஒரு பரிசுப் பெட்டி.



''என்ன?''

''உங்களுக்கு என்னுடைய திருமண வாழ்த்துக்கள்'' சொல்லிக் கொண்டே பரிசுப் பெட்டியை நீட்டினான்.

ராம்சேகர் நெற்றியைச் சுருக்கினான்.

''நீங்க யார்ன்னு தெரியலையே..?''

அவன் தாடிக்குள் புன்னகைத்தான். ''என்னை உங்களுக்குத் தெரிஞ்சிருக்க நியாயமில்லை. பிரமிளாவுக்குத் தெரியும்...''

ராம்சேகர் பக்கத்தில் நின்று தலை குனிந்திருந்த பிரமிளாவை ஏறிட்டான். ''பிரமிளா! இவர் யார்ன்னு எனக்குத் தெரியலையே..?''

''தெரிஞ்சுக்க வேண்டாம்... வாங்க போலாம்.''

நகர முயன்றவளை நிறுத்தினான் ராம்சேகர்.

''நில்லு பிரமிளா. இவர் யார்ன்னு நான் தெரிஞ்சுக்க விரும்பறேன்...''

''ஒரு வாக்கியம் சொல்றேன். நீங்களே புரிஞ்சுக்குவீங்க... இந்த உலகத்துல எனக்கு வேண்டாத நபர்...''

''நீ என்ன சொல்கிறாய்?''

''என்னோட முன்னாள் கணவர்...''




கல்கத்தா,

டல்ஹௌசி பார்க் ரோட்டில், தென்னை மரங்கள் சூழ்ந்த பங்களா. பங்களாவின் உள்ளேயும் - வெளியேயும் ஒரு விழாக்கோலம் ஒட்டியிருந்தது.

சர விளக்குகள் மின்சாரத்தை சாப்பிட்டு - விதவிதமான நிறங்களில் எரிந்தபடி - மரங்களில் தொங்கிக் கொண்டிருந்தன. பங்களாவைச் சுற்றியிருந்த நான்கு பக்க ரோடுகளின் ஓரங்களில் கார்களும் ஏராளமாய் தெரிந்தன.

பங்களாவின் உள்ளே - புல்தரையைச் சுற்றி வெண்மையான குர்தாக்களிலும், 'சூட் கோட்'களிலும்

ஆண்கள்- சேலை, மேக்சிகளில் பெண்கள் நின்றிருந்தார்கள். பாண்ட் வாத்தியம் உற்சாகமான முழக்கத்தில் இருந்தது. பத்திரிகைக்காரர்கள் காமிராவும் கையுமாய் திரிந்தார்கள்.

லட்சுமணும் அவருடைய மனைவி வசுந்தராவும் - முகப்பில் நின்று வருகிறவர்களை கைகூப்பி - வங்காள மொழியிலும், ஆங்கிலத்திலும் பேசி வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். யாரோ கேட்டார்கள்.

''என்ன லட்சுமண்! உங்க மகள் கிருபாவை வரவேற்க நீங்களும் உங்க மனைவியும் ஏர்போர்ட் போகலையா?''

ஐம்பது வயதான லட்சுமண் ஒழுங்கான பல்வரிசையில் சிரித்தார். ''நானும் என்னோட மனைவியும் ஏர்போர்ட்டுக்கு போயிட்டா, வர்றவங்களை யார் வரவேற்கிறது? கிருபாவை ஏர்போர்ட்டிலிருந்து கூட்டிவர - அவளை கட்டிக்கப் போகிற என் தங்கச்சி மகன் விநோத் போயிருக்கான்....''

''கல்யாணம் எப்போ?''

''கல்யாணமா... மூச்! கிருபா 'கிராண்ட் ஸ்லாம்' டென்னிஸ் போட்டியிலும், விம்பிள்டன் போட்டியிலும் ஜெயிக்கிற வரைக்கும் கல்யாணம் கிடையாது. போய் உட்கார்ந்து ட்ரிங்க்ஸ் எடுத்துக்குங்க பானர்ஜி...''

அந்த பானர்ஜி தன் பிரமாண்டமான தொந்தியைத் தூக்கிக்கொண்டு நகர்ந்து போனதும். ஒரு பத்திரிகை நிருபர் லட்சுமணை நெருங்கினார்.

''சார்! நான் 'பெங்கால் டே' பத்திரிகை நிருபர். உங்ககிட்டே சில கேள்விகள்...''

''இந்த கேள்விகளை அப்புறம் வைச்சுக்கலாமே?''

''ப்ளீஸ் சார்! உங்க மகள் ஏர்போட்டிலிருந்து வந்ததும், கும்பல் அலைமோதும். நீங்க தனியா கிடைக்க மாட்டீங்க. அதனால்தான் இப்பவே நாலைஞ்சு கேள்விகளை...''

''சரி கேளுங்க.''

''கிருபா உங்களுக்கு ஒரே மகள்தானே?''

''ஆமா.''

''கனடா ஓப்பன் டென்னீஸ் போட்டியில் ஜெயிச்சு,



இன்னிக்கு வெற்றி வீராங்கனையா - இந்தியாவுக்கு திரும்பற கிருபாவுக்கு எங்கள் பத்திரிகை சார்பா வாழ்த்துக்கள். கிருபாவுக்கு இந்த வெற்றி கிடைக்கும்ன்னு நீங்க நினைச்சீங்களா?''

''எனக்கு நம்பிக்கை இருந்தது.''

''அந்த நம்பிக்கைக்கு காரணம் என்ன?''

''நான் அவளுக்கு அப்பா மட்டுமில்லை. 'கோச்'சும் கூட. இந்த கனடா ஓப்பன் வெற்றி அவளுக்கு சாதாரணம்.''

''கிருபாவை இந்தியாவின் 'ஸ்டெபிகிராப்' என்று சிலர் வர்ணித்திருப்பதைப் பற்றி..?''

''ஸ்டெபிகிராபோடு என் மகளை ஏன் ஒப்பிடணும்? ஸ்டெபியோட ஆட்டத்துக்கும், என்னோட மகள் கிருபாவோட ஆட்டத்துக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு.''

''கிருபா விம்பிள்டனில் விளையாடுவாங்களா?''

''கண்டிப்பா.''

''உங்களுக்கு சொந்த ஊர் சென்னை. இருந்தாலும் கல்கத்தாவில் பல வருடமா இருக்கீங்க. என்ன காரணம்?''

''விளையாட்டுகளுக்கு பெயர் போன நகரம் கல்கத்தா. கிருபாவுக்கு டென்னிஸ்ல இருக்கிற ஆர்வத்தை பார்த்துட்டு, என்னோட உத்தியோகத்தை கல்கத்தாவுக்கு மாத்திகிட்டு வந்துட்டேன். இங்கே வரும்போது கிருபாவுக்கு பதினாறு வயசு. கடந்த ஆறு வருட காலத்துல நான் அவளுக்கு கொடுத்த பயிற்சிதான், இன்னிக்கு அவளை இந்த நிலைமைக்கு கொண்டு வந்திருக்கு...''

''டென்னிஸ் உலக அரங்கில் கிருபாவோட ரேங்க் எவ்வளவு?''

''முப்பத்திரெண்டாவது இடம்.''

''முதல் இடத்துக்கு வரமுடியும்ன்னு நினைக்கிறீங்களா?''

''ஏன்... வராமே..? இன்றைக்கு முதல் இடத்தில் இருக்கிற ஸ்டெபிகிராப் ஒரு காலத்தில்

அறுபத்தெட்டாவது இடத்துல இருந்தா...''

லட்சுமண் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - வாசலில் பரபரப்பு தெரிந்தது. பத்திரிகையாளர்கள் காமிராக்களோடு ஓடினார்கள்.

வசுந்தரா சொன்னாள்.

''என்னங்க... கிருபா வந்துட்டா போலிருக்கு...''

''ஆரத்தி எடுக்கிற பொண்ணுங்க எங்கே?''

''அதோ...''

''அவங்களை கூட்டிகிட்டு போர்டிகோவுக்கு வா.''

அந்த காண்டசா கார் - கும்பலுக்கு மத்தியில் கிரமமாய் - ஊர்ந்து - போர்டிகோவுக்கு வந்தது. பாண்ட் வாத்தியம் உச்சத்தில் முழங்க - காமிராக்கள் 'பளிச் பளிச்'சென்று மின்ன - கிருபா காரின் பின்சீட்டுக் கதவைத் திறந்துகொண்டு - கீழே இறங்கினாள்.

கீழே இறங்கிய கிருபா மஞ்சள் நிற மாக்சியில் 'தளதள'வென்று தெரிந்தாள். பட்டை உரித்த வாழைத்தண்டின் மினுமினுப்பு உடம்பில் தெரிந்தது.

அவசர அவசரமாய் ஆரத்தி கரைத்தார்கள். தேங்காயை இடம் வலமாய் - கிருபாவின் தலையைச் சுற்றினார்கள்.

கிருபா அதையெல்லாம் பொருட்படுத்தாமல் - லட்சுமணை நோக்கி பாய்ந்தாள். ''டாடி...!''

''பேபி! என் கனவு பலித்தது. இன்னும் வெற்றிகள் உனக்காக காத்திருக்கு.''

''கனடா - ஓபன்ல ஜெயிப்பேன்னு... நான் கொஞ்சம் கூட நினைச்சு பார்க்கலை டாடி...''

லட்சுமண் - வசுந்தரா கால்களில் விழுந்து எழுந்தாள் கிருபா. காமிராக்கள் ஓயாமல் மின்னலடித்தன. போர்டிகோ படி ஏறுவதற்குள் - பாலிதீன் கவர்களில் அடைக்கப்பட்ட மலர்க் கொத்துகள் எல்லா திசைகளிலிருந்தும் அவளை நோக்கி நீண்டன. வாங்கி வாங்கி தோள்கள் சோர்ந்தன. நிருபர்கள் மைக்குகளை - அவளுடைய முகத்திற்கு நேரே நீட்டி - கேள்விகளை இந்தி, பெங்காலி, ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளிலும் கேட்டார்கள்.



''இந்த வெற்றியை எப்படி பெற்றீர்கள்?''

''காரணம் என் அப்பா.''

''வெற்றி பெற்றதும் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?''

''அந்த சந்தோஷத்தை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.''

''நீங்க வைத்திருக்கும் அடுத்த குறி..?''

''விம்பிள்டன்.''

''ஸ்டெபி, நவரத்திலோவா இவர்களை ஜெயிக்க முடியும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?''

''ஏன் இல்லாமல்..? டென்னிஸ் விளையாடுவதறற்கு உடல் வலிமையைக் காட்டிலும், மன வலிமைதான் முக்கியம். அது என்னிடம் நிறைய இருக்கிறது?''

''கனடா ஓபன் இறுதிப் போட்டியில் உங்களை எதிர்த்து விளையாடிய அமெரிக்க வீராங்கனை ஏஞ்சலாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''திறமையான ஆட்டக்காரர். அவருடைய சர்விஸ்கள் என்னை திணற வைத்தன. முதல் செட்டை கோட்டை விட்ட நான் அடுத்த இரண்டு செட்களிலும் என் முழுத் திறமையைக் காட்டியதால், வெற்றி பெற முடிந்தது.''

''உங்களுக்கு சினிமாவில் நடிக்க வாய்ப்பு வந்ததாக கூறப்படுவது பற்றி..?''

''ஆமாம். வாய்ப்பு வந்தது. நான் ஒப்புக்கொள்ளவில்லை.''

''ஏன் ஒப்புக்கொள்வில்லை? நீங்கள் இப்போது ஃபீல்டில் இருக்கும் நடிகைகளைக் காட்டிலும் அழகாக இருக்கிறீர்கள். நடித்தால் என்ன?''

''சினிமா ஒரு சாக்கடை, அதில் இறங்கி என்னை அசுத்தப்படுத்திக்க விரும்பவில்லை.''

''உங்கள் கல்யாணம் எப்போது?''

''விம்பிள்டன் கோப்பை என் கைக்கு வந்து சேரட்டும்...''

''விம்பிள்டன் கோப்பையை வெல்ல முடியாவிட்டால் கல்யாணமே செய்துகொள்ள மாட்டீங்களா?''

''கல்யாணம் செய்துகொள்வதற்காகவாவது, விம்பிள்டன் கோப்பையை ஜெயிப்பேன்.''

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு படபடவென்று பதில் சொல்லிக் கொண்டிருந்த கிருபாவை நோக்கி - கும்பலைத் தள்ளிக்கொண்டு விநோத் வேகவேகமாய் வந்தான்.

''கி... ரு... பா...''

அவன் முகத்திலும் - குரலிலும் கலவரம்.

''என்ன விநோத்?''

''உடனே வா. அப்பாவுக்கு மாரடைப்பு.''




ராம்சேகர் புன்னகைத்தான். அந்த இளைஞனிடம் திரும்பினான்.

''நீங்க மிஸ்டர்வாசுதேவன், இல்லையா? உங்களைப் பற்றி பிரமிளா நிறைய சொல்லி கேள்விப்பட்டிருக்கேன். ஆனால் நேர்ல பார்த்ததில்லை. இன்னிக்குதான் முதல் தடவையா பார்க்கிறேன். உங்களைப் பார்த்ததுல ரொம்பவும் சந்தோஷம்'' கைகளைக் குவித்து வணக்கம் சொன்னான் ராம்சேகர்.

அந்த இளைஞன் - வாசுதேவன் மெல்லச் சிரித்தான். ''உங்க கல்யாணத்துக்கு நான் அழையா விருந்தாளியா வந்திருக்கேன். இந்தக் கல்யாணத்துல நான் கலந்துக்கலாமா?''

பிரமிளா குறுக்கிட்டு அடக்கமாய் சீறினாள். ''அந்நிய ஆட்கள் யாரும் இந்த கல்யாணத்துல கலந்துக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்களை இந்த கல்யாணத்துக்கு வரச்சொல்லி யார் வெத்திலை பாக்கு வைச்சு அழைப்பு கொடுத்தது?''

''அழைப்பு இருந்தாத்தான் இந்த கல்யாணத்துக்கு வரணுமா, பிரமிளா? உனக்கு ஒன்றரை வருட காலமா புருஷனா இருந்திருக்கேன். அந்த உரிமையில நான் வரக்கூடாதா?''



''அந்த உறவுதான் முறிஞ்சு போச்சே! கல்யாணமான இரண்டாவது மாசமே உங்ககிட்டயிருந்து பிரிஞ்சுட்டேன். போன மாசம் கோர்ட் மூலமா - சட்டபூர்வமா விவாகரத்து வாங்கிக்கிட்டோம். அப்புறமும் என்ன உறவு வாழுதாம்?''

''பிரமிளா... நான் இப்போ திருந்திட்டேன்.''

''நீங்க திருந்தினால் என்ன... திருந்தாமே போனாத்தான் எனக்கென்ன? நான் உங்களை குப்பை மாதிரி ஒதுக்கி எவ்வளவோ நாளாச்சு. இந்த கல்யாணத்துல நீங்க ஏதாவது குழப்பம் விளைவிக்க நினைச்சா போலீசைக் கூப்பிடுவேன்.''

''நான் குழப்பம் பண்ண வரலை பிரமி. உன்னையும், உனக்கு புதுசா கிடைச்சிருக்கிற துணையையும் வாழ்த்திட்டு போகத்தான் வந்தேன்.''

''என்னது...? வாழ்த்த வந்தீங்களா? உங்க வாழ்த்து இல்லேன்னா எங்களால வாழவே முடியாதா என்ன?''

ராம்சேகர் இடைமறித்தான.

''பிரமிளா நீ அவரை இப்படி பேசறது சரியில்லை. அவர் இந்தக் கல்யாணத்துல கலந்துக்கணும்ன்னு ஆசைப்பட்டு வந்திருக்கார். என்ன இருந்தாலும் அவர் உனக்கு...''

''சாரி! அவர் இங்கே இருக்கிறதுல எனக்கு விருப்பமில்லை. நீங்க தாலி கட்டும்போது என் மனசு சந்தோஷமா இருக்கணும். இவர் இங்கே இருந்தால் எனக்கு அந்த சந்தோஷம் கிடைக்காது.''

வாசுதேவன் புன்னகைத்தான். ''சரி, நான் போயிடறேன். இந்த பரிசையாவது நீ வாங்கிக்கணும் பிரமிளா...''

''பரிசுதானே...! கொடுங்க.''

பிரமிளா கையை நீட்ட - அவன் கொடுத்தான். பரிசுப் பெட்டியை வாங்கிக்கொண்டவள் கேட்டாள்.

''இந்த பரிசு எனக்குத்தானே?''

''ஆமா.''

''இனிமே நான் இதை என்ன வேணும்னாலும்

பண்ணலாம்?''

''ம்...''

பிரமிளா கோயில் வாசற்படியைவிட்டு இறங்கி கொஞ்சம் தள்ளி 'இங்கே குப்பைகளைக் கொட்டவும்' என்று எழுதியிருந்த சிமெண்ட் தொட்டிக்குள் வீசி எறிந்தாள்.




டாக்டர் அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட - கண்ணீரோடு வெளியே காத்திருந்த வசுந்தராவும் கிருபாவும் தவிப்போடு அவரை நெருங்கினார்கள்.

''டாக்டர்...''

''கவலைப்படாதீங்க. சாதாரண அட்டாக்தான். காரணம் அதிகப்படியான சந்தோஷம். பொண்ணு டென்னிஸ்ல ஜெயிச்ச சந்தோஷம்... அவ்வளவுதான். ஆனால், இனிமே இவ்வளவு சந்தோஷம் இவர் படக்கூடாது. அதே மாதிரி அதிர்ச்சியான விஷயங்களும் அவருடைய காதுக்கு போகக்கூடாது. இனிமே மிஸ்டர் லட்சுமண் ஒரு கண்ணாடி பாத்திரம் மாதிரி. அவரை பத்திரமா பாதுகாக்கணும்.''

''அப்பாவை உள்ளே போய் பார்க்கலாமா டாக்டர்?''

''தாராளமா. ஆனால் அதிகமா பேசாதீங்க'' சொல்லிவிட்டு டாக்டர் நகர, கிருபாவும் வசுந்தராவும் அறைக்குள் நுழைந்தார்கள்.

கண் மூடி படுத்திருந்த லட்சுமண் - காலடிச் சத்தம் கேட்டு தலையை உயர்த்தினார். கிருபா நடுக்கத்தோடு அவர் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

''டா... டாடி...''

அவர் புன்னகைத்தார். ''என்னம்மா அழறியா? எனக்கு ஒண்ணுமில்லை. நான் நல்லா இருக்கேன். டாக்டர் ஏதாவது சொல்லி பயமுறுத்தினாரா?''



''என்னங்க! இனிமேல் உங்களுக்கு ஓய்வுதான் வேண்டும்'' மனைவி வசுந்தரா அவருடைய தலையைக் கோதினாள்.

லட்சுமண் சிரித்தார்.

''என்னோட உடம்பைப் பற்றி எனக்குத் தெரியும். வசு, கிருபா விம்பிள்டன்ல ஜெயிச்சு நம்பர் ஒன் டென்னிஸ் வீராங்கனையா வர்ற வரைக்கும் எனக்கு ஒண்ணும் ஆயிடாது. எந்த அட்டாக்கும் என்னோட ஹார்ட்டை ஒண்ணும் பண்ணிட முடியாது.''

''அதிகமா பேசாதீங்க டாடி...''

''இதையும் டாக்டர்தான் சொன்னாரா? டாக்டர் சட்டர்ஜி பூனையை பூதக்கண்ணாடி வழியா பார்த்துட்டு, புலின்னு சொல்லக்கூடியவர்.''

''டாக்டர் சொல்றதை அலட்சியப்படுத்தக் கூடாதுங்க. சட்டர்ஜி நம்ம குடும்ப டாக்டர். அவர் எதைச் சொன்னாலும் சரியாத்தான் இருக்கும்.''

நர்ஸ் ஒருத்தி உள்ளே வந்தாள்.

''மிஸ் கிருபா, உங்களுக்கு போன் வந்திருக்கு.''

கிருபா நர்ஸை ஏறிட்டாள்.

''போன்ல யாரு?''

''யாரோ ஒரு லேடி. உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் சொல்லணுமாம்.''

''நான் இருக்கேன்னு சொல்லிட்டீங்களா?''

''ஆமா.''

''என்னோட ரசிகையாத்தான் இருக்கணும். இவங்களுக்கெல்லாம் நேரம் காலமே கிடையாது. ஆஸ்பத்திரிக்குப் போனாலும், விடாமே டெலிபோன்ல துரத்தறாங்க... சே!'' சொல்லிக்கொண்டே நர்சை பின்தொடர்ந்தாள் கிருபா.

பக்கத்து அறையிலேயே டெலிபோன் இருந்தது. ஒருக்களித்து விழுந்திருந்த ரிசீவரை எடுத்து பேசினாள்.

''ஹலோ...''

''மிஸ் கிருபா..?'' ஒரு ஆண் குரல் கேட்டது.

''எஸ்...''

''நான் உங்க ரசிகன்...''

''யாரோ பொண்ணு பேசறதா நர்ஸ் சொன்னாங்க...''

''சாரி! நான்தான் பெண் குரலில் பேசினேன்.''

கிருபாவுக்குள் கோபம் சுர்ரென்றது. அடக்கிக்கொண்டு ''என்ன விஷயம்?'' என்றாள்.

''நான் உங்க ரசிகன்...''

''அதைத்தான் சொல்லிட்டீங்களே..?''

''எல்லாரும் உங்க டென்னிஸ் ஆட்டத்துக்குத்தான் ரசிகர்களாக இருப்பாங்க. நான் அப்படியில்லை...''

''பிறகு?''

''உங்க அழகான உடம்புக்கு நான் ரசிகன்.''

''யூ... ராஸ்கல்...''

''இந்த ராஸ்கல்... உங்க உடம்பை... துணியில்லாம... முழுமையா பார்க்க விரும்பறான். என்னோட ஆசையை நிறைவேத்தி வைப்பீங்களா?''

''நீ... நீ...'' கிருபா ஆத்திரத்தில் வார்த்தை வராமல் தத்தளிக்க -

''யோசிச்சு வையுங்க. மறுபடியும் போன் பண்றேன்.''

மறுமுனையில் ரிசீவர் கவிழ்ந்துகொண்டது.




''என்ன இருந்தாலும் நீ அப்படி நடந்துகிட்டது சரியில்லை பிரமிளா. அந்த மனிதனை நீ அவ்வளவு தூரத்துக்கு அவமானப்படுத்தியிருக்க வேண்டாம்.''

''அந்த மனிதர்கிட்டே எப்படி நடந்துக்கணுமோ அப்படிதான் நடந்திருக்கேன். அந்த ஆளை கல்யாணத்துக்கு வான்னு நாம கூப்பிட்டோமா?''

இடம்: ராம்சேகரின் குவார்ட்டர்ஸ் பங்களா. நேரம்: இரவு ஒன்பதரை. மலர் தூவின கட்டிலில் பக்கம் பக்கமாய் உட்கார்ந்திருந்தார்கள் ராம்சேகரும், பிரமிளாவும். அறை முழுக்க ஊதுவத்தியின் மணம்.

''என்ன இருந்தாலும் அவர்... உனக்கு...''



''மாஜி கணவர்ன்னு சொல்றீங்களா..? இனிமே அந்த வார்த்தையை சொல்லாதீங்க! அதுக்குத்தான் கோர்ட்டு மூலமா விவாகரத்து வாங்கிட்டேனே...''

''சட்டம் உனக்கும் அவருக்கும் மத்தியில் ஒரு திரை மாதிரிதான். அது ஒண்ணும் இரும்புச் சுவரில்லை...''

''இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க? அந்த ஆளோட கால்ல விழுந்து ஆசிர்வாதம் வாங்கியிருந்தா உங்களுக்கு திருப்தியா இருந்திருக்குமா?''

''பிரமிளா! நீ ஆத்திரப்படறதுல - கோபப்படறதுல அர்த்தமே இல்லை. தான் ஒரு நல்ல வேலையில் இருக்கிறதா சொல்லி, உன்னை ஏமாத்தி கல்யாணம் பண்ணிகிட்டார். கல்லூரி பசங்களுக்கு போதை மருந்து வியாபாரம் பண்ணி பணம் சம்பாதிச்சார். இந்த இரண்டுமே அவர் பண்ணின பெரிய குற்றங்கள்தான். நான் மறுக்கலை. உனக்கு உண்மை தெரிஞ்சதுமே, அவர் அந்த தொழிலை விட்டுட்டு, ஒரு பெட்டிக்கடையை வைச்சுகிட்டு நாணயமா பிழைக்க முன்வரலையா? எப்போ ஒருத்தர் தான் பண்ணின தப்பை உணர்ந்து திருந்திட்டாரோ அப்பவே அவரை மன்னிச்சுடறது நல்லது.''

பிரமிளா தன் பெரிய விழிகளால் முறைத்தாள். ''நீங்க அவருக்கு சப்போர்ட்டா?''

''சப்போர்ட்டில்லை. ஒரு பச்சாதாபம்தான்.''

''பச்சாதாபமெல்லாம் படாதீங்க! ஒரு பிரைவேட் கம்பெனியில் சேல்ஸ் மேனேஜரா இருக்கேன். நாலாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கறேன்னு என்னை நம்ப வைச்சு, கழுத்தில தாலியைக் கட்டிய அந்த ஆள் ஒரு அயோக்கியன். அந்த பொய்யோடு நிறுத்தியிருந்தால் கூட பரவாயில்லை. போதை மருந்து வியாபாரமும் பண்ணி...! சே! அந்த ஆளை அப்பவே போலீஸ்ல பிடிச்சு கொடுத்து, கம்பி எண்ண வைச்சிருக்கணும். முட்டாள்தனம் பண்ணிட்டேன்.''

''சரி, சூடா இருக்கே... இந்த பாலை சாப்பிடு! நாம இரண்டு பேரும் போடற சண்டையில் - முதல் இரவு வேஸ்ட்டா போயிட்டிருக்கு...''

''தப்பா சொல்றீங்க...''

''என்ன தப்பு?''

''உங்களுக்கு வேணுமின்னா இது முதல் இரவா இருக்கலாம். ஆனால் எனக்கு இது அப்படியில்லை. நான் ஏற்கெனவே பந்தியில் போடப்பட்ட இலை...''

''இதோ பார் பிரமிளா... இந்த சினிமா வசனமெல்லாம் என்கிட்டே பேசாதே. உன்னோடு புதையுண்டு போயிருக்கிற சகலவிதமான உண்மைகளையும் தெரிஞ்சுகிட்டுதான் உன்னை கல்யாணம் பண்ணிக்க முடிவெடுத்தேன். நீ இன்னியிலிருந்து புதுவாழ்க்கை வாழப்போறே. அதாவது புது ஜென்மம் எடுக்கப் போறே...!''

''நீங்க சொல்றது உண்மைதானா?''

''உண்மைதான்.''

''நீங்க அப்படி நினைக்கிறது உண்மையானால்..?''

''உண்மையானால்..?''

''இனிமே அந்த 'ஆளை' பத்தி என்கிட்டே பேசாதீங்க! மறந்தும் கூட அந்த ஆளோட 'பெயர்' உங்க உதட்டுல உச்சரிக்கப்படக்கூடாது.''

''சரி.''

''வெறுமனே சரின்னா போதாது...''

''வேற என்ன பண்ணணுமாம்?''

''என் தலையில அடிச்சு சத்தியம் பண்ணுங்க.''

ராம்சேகர் பிரமிளாவின் தலை மேல் கையை வைத்தான். ''சத்தியமா இனிமே அந்த ஆளைப் பத்தி பேசமாட்டேன். முதலிரவைக் கொண்டாடலாமா?''

''ம்...''

விளக்கை அணைத்தான். அதே விநாடி -

பக்கத்து டீபாயின் மேலிருந்த டெலிபோன் தன் தொண்டையைத் திறந்து கத்த ஆரம்பித்தது.

ராம்சேகர் கட்டிலில் தாழ்ந்து போய், ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''......''

''டிரங்க்காலா..? கொடுங்க.''






மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு காரில் திரும்பும்போது, வசுந்தரா கிருபாவின் முகத்தை பார்த்துவிட்டு கேட்டாள்.

''கிருபா! ஏன் என்னவோ மாதிரி இருக்கே?''

கிருபா சுதாரிப்புக்கு வந்தாள்.

''அப்பாவோட உடல்நிலையை நினைச்சுத்தான்.''

''காரணம் அது இல்லை...''

''அம்மா...''

''எனக்கு தெரியுண்டி! நீ போன் பேசிட்டு வந்ததிலிருந்து சரியில்லை. போன்ல உன் கூட பேசியது யாரு?''

''ஓ... ஒரு ரசிகைதான்.''

''பொய் சொல்லாதே'' சொன்ன வசுந்தரா காரை தாகூர் ரோட்டின் ஓரமாய் - ஒரு மரத்துக்கு கீழே கொண்டுபோய் நிறுத்தினாள்.

''ஏம்மா... காரை நிறுத்திட்டே?''

''நீ உண்மையான காரணத்தை சொல்லாத வரைக்கும் காரை நான் இங்கிருந்து எடுக்கப் போறதா இல்லை...''

''அய்யோ... அம்மா... அது வந்து...''

''சொல்லு.''

கிருபா தலையைக் கவிழ்த்துக்கொண்டு - தன் இடது கையின் ஆட்காட்டி விரலால் டாஷ்போர்டைக் கீறினாள்.

சில விநாடிகள் மவுனம்.

''ம்... சொல்லு. போன்ல யாரு?''

கிருபா நிமிர்ந்தாள். கண்களில் நீர்ப்படலம். ஆரஞ்சு சுளை உதடுகள் மெல்ல துடித்தன.

''அ... அம்மா...''

''போன்ல யாருன்னு கேட்டேன்.''

''ஓ... ஒரு... பொறுக்கி...''

''யாரவன்?''

''தெரியலை.''

''என்ன பேசினான்?''

''சொ... சொல்றதுக்கு வாய் வரலை. அசிங்கமாக பேசினான்...''

''அசிங்கமான்னா... எப்படி?''

கிருபா தயங்கினாள். வசுந்தரா அவள் தோள் மேல் கையை வைத்தாள். ''பரவாயில்ல சொல்லு. பெத்த தாய்கிட்ட மகள் எதையும் சொல்லலாம்...''

''வந்து... வந்து... அந்த ராஸ்கல் என்னோட டென்னிஸ் ஆட்டத்துக்கு ரசிகன் இல்லையாம். என்னோட அழகான உடம்புக்குத்தான் ரசிகனாம். என்னோட உடம்பை துணியில்லாமே பார்க்கணுமாம்.''

வசுந்தராவின் முகம் சிவந்தது. உடனே வியர்த்தது.

''அ... அப்புறம்..?''

''நான் சூடா பதில் சொல்றதுக்குள்ளே ரிசீவரை வைச்சுட்டான்.''

''மருத்துவமனையில் அதை ஏன் நீ சொல்லலை?''

''சொல்லியிருந்தா உன்னால என்னம்மா பண்ணியிருக்க முடியும்?''

வசுந்தரா மவுனித்தாள். பிறகு காரை உசுப்பிக்கொண்டே சொன்னாள். ''இதை சும்மா விடக்கூடாது...''

''என்னம்மா பண்ணப்போறே?''

''போலீசுக்கு போய் புகார் தரலாம்.''

''அதனால என்ன பிரயோஜனம்?''

''டெலிபோன்ல பேசின அந்த அயோக்கியனை அவங்க கண்டு பிடிக்க முயற்சி எடுப்பாங்களே!''

''முயற்சி எடுப்பாங்க. சரிதான். ஆனால் போலீஸ்கிட்டயிருந்து பத்திரிகைகளுக்கு செய்தி சுலபமாபோயிடும். என் உடம்புல துணி இல்லாமே ஒரு ரசிகன் பார்க்க ஆசைப்பட்ட செய்தி எல்லா பத்திரிகைகளுக்கும், விருந்து கிடைச்ச மாதிரி ஆயிடும். உனக்கும் எனக்கும் மட்டும் தெரிஞ்ச இந்தச் செய்தி ஊருக்கே தெரியணும்ன்னு ஆசைப்படறியா?''

''கிருபா...''

''இந்த பிரச்சினையை இதோடு விட்டுடும்மா.''

''எனக்கு இரத்தம் கொதிச்சு போயிருக்கு. போன் பண்ணினவன் ஒரு பெண்ணுக்கு மகனா பிறந்திருக்க மாட்டான். பேய்க்குத்தான் பிறந்திருப்பான்.''



''சரி, காரை கிளப்பும்மா.''

வசுந்தரா காரை நகர்த்தினாள். காரின் வேகத்தில் கோபம் தெரிந்தது. சிறிது நேர மவுனத்திற்கு பிறகு கிருபாகூப்பிட்டாள்.

''அம்மா...''

''ம்...''

''இந்த விஷயத்தை அப்பாவோட காது வரைக்கும் கொண்டு போயிடாதே! அவர் உடம்பு இருக்கிற நிலைமைக்கு டென்ஷன் ஆயிடக்கூடாது...''

''அவன் யாராயிருப்பான்னு நீ நினைக்கிறே, கிருபா?''

''எனக்குத் தெரியலை. இதுவரைக்கும் நான் கேட்காத குரல்...''

சில நிமிடப் பயணம். கார் பங்களாவுக்குள் நுழைந்து - போர்டிகோவில் நின்றது. இருவரும் இறங்கி, உள்ளே போனார்கள். கிருபா உடை மாற்றிக்கொள்வதற்காக - மாடியறையை நோக்கிப் போக - வசுந்தரா ஹாலில் இருந்த தன் அறைக்குள் நுழைந்தாள். குழப்பமாய் நெற்றியைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

'யாராயிருக்கும்?'

'அவ்வளவு தைரியமாய் - கொச்சையாய் எவன் பேசியிருக்க முடியும்?'

வசுந்தராவின் நெற்றி நரம்புகள் கோபத்தில் துடித்துக் கொண்டிருந்த அதே விநாடி - டெலிபோனும் துடித்தது.

மெல்ல எழுந்து போய் ரிசீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

''யார் பேசறது? வசுந்தராவா?'' ஒரு ஆண் குரல் கேட்டது.

''ஆமா... நீங்க... யாரு?''

''உங்க மருமகன்.''

''மருமகனா?''

''ஆமா... உங்க பொண்ணுக்கு சாந்தி முகூர்த்தம் மட்டும் பண்ணப் போகிற மருமகன்...''

வசுந்தராவுக்குள் கோபம் பற்றிக்கொண்டது.

''டேய்... நீதானா... என் பொண்ணுகிட்டே அசிங்கமா பேசினவன்? யார்ரா... நீ?''

''கோவிச்சுக்காதீங்க அத்தே! உங்க பொண்ணோட டென்னிஸ் ஆட்டத்துக்கு, ஆயிரக்கணக்கான பேர் ரசிகர்களா இருக்கலாம். ஆனால், நான் உங்க பொண்ணோட அழகுக்கு ரசிகன். அந்த அழகை நான் ஆராதனை செய்ய வேண்டாமா?''

''ராஸ்ஸ்ஸ்க்கல்...!''

''ரொம்பவும் பல்லைக் கடிக்காதீங்க அத்தே... வயசான காலத்துல கொட்டிடப் போவுது. நான் யார்ன்னு தெரிஞ்சுக்க ஆசைப்படறீங்க..? அவ்வளவுதானே! இன்னும் கொஞ்ச நாள்ல நானே வந்து உங்களை சந்திப்பேன். அதுவரைக்கும் உங்களுக்கு வணக்கம் கூறி விடை பெற்றுக்கொள்வது இந்த டெலிபோன் மருமகன்...''

வசுந்தரா அதிர்ந்து போய் - ரிசீவரைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட்டது.

''டொக்!''

உள்ளே வந்தாள் கிருபா. உடை மாற்றியிருந்தாள்.

''போன்ல யாரம்மா?''

வியர்த்த முகமாய் நிமிர்ந்தாள் வசுந்தரா. ''போன்ல உன் கூட பேசின அதே அயோக்கியன்தான்.''

''அ... அவனா..? என்ன பேசினான்?''

''உன்கிட்டே எதைப் பேசினானோ... அதையேதான்.''

''யாரோ விளையாடறாங்கன்னு நினைக்கிறேன்.''

''இது விளையாட்டில்லை கிருபா. இந்த விஷயத்துல நாம அலட்சியம் காட்டக்கூடாது.''

''என்ன செய்யலாங்கிறே?''

''உதவி போலீஸ் கமிஷனர் ராய் நம்ம குடும்பத்துக்கு வேண்டியவர். அவர்கிட்ட மட்டும் விஷயத்தை சொல்லி அந்த டெலிபோன் ஆசாமி யார்ங்கிறதை கண்டுபிடிக்கச் சொல்லலாமே...''

''அவர் மத்தவங்ககிட்டே சொல்லமாட்டாரா?''



''சொல்ல வேண்டாம்ன்னு சொல்லிட்டா... எதுக்காக சொல்லப் போறார்?''




டெலிபோன் பேசிவிட்டு வந்த ராம்சேகரிடம் கேட்டாள் பிரமிளா.

''என்னங்க... டிரங்க்காலா?''

''ஆமா.''

''எங்கிருந்து?''

''பெங்களூரிலிருந்து என்னோட மாமாவும் அத்தையும் பேசினாங்க.''

''என்னவாம்?''

''உன்னையும் என்னையும் பெங்களூர்க்கு வரச் சொல்றாங்க. தேனிலவை அந்த ஊர்லதான் நாம கொண்டாடணுமாம்.''

''நீங்க என்ன சொன்னீங்க?''

''வர்றேன்னு சொல்லிட்டேன்.''

''உண்மையாகவே போகப் போறோமா?''

''ஆமா.''

''என்னங்க... நீங்க?''

''ஏன்..? உனக்கு பெங்களூர் வரப் பிடிக்கலையா? என்னோட அத்தையும் மாமாவும் ரொம்ப நல்லவங்க.''

''நான் அதுக்காக சொல்லலை...!''

''பின்னே?''

''நானே ரெண்டாவது தடவையா கழுத்தை நீட்டி தாலியை வாங்கியிருக்கேன். இந்த கோலாகலமெல்லாம் தேவைதானா?''

ராம்சேகர் முகம் சிவந்தான். ''இதோ பார் பிரமிளா... இன்னொரு வாட்டி இந்த 'செகண்ட் ஹாண்ட்' வார்த்தையை சொன்னே, அப்புறம் உன்கிட்ட நான் பேசமாட்டேன். உனக்கு நடந்த முதல் கல்யாணம் கல்யாணமே இல்லை. அது ஒரு மோசடின்னு நீயே சொல்லியிருக்கே. அப்படியிருக்கும்போது நீயே ஏன்... அந்த கல்யாணத்துக்கு முக்கியத்துவம் தர்றே?''

''சமயத்துக்கு ஞாபகம் வந்துடுதே.''

''இனிமே ஞாபகம் வரக்கூடாது.''

''உத்தரவு.''

''நாளைக்கே நாம பெங்களூர் புறப்படறோம். மாமா வீட்ல ஒரு வாரத்துக்கு ராஜ உபசாரத்தோடு தங்கப் போறோம்.''

''தங்கள் சித்தம்...'' சொல்லிவிட்டு சிரித்த பிரமிளாவை மெல்ல அணைத்து - படுக்கையில் சாய்த்தான் ராம்சேகர்.




உதவி கமிஷனர் அலுவலகத்திற்கு வசுந்தராவும், கிருபாவும் போனபோது, ராய் உற்சாகமாய் வரவேற்றார்.

''வாம்மா கிருபா! நானே உன் வீட்டுக்கு வந்து உன்னை வாழ்த்தணும்னு நினைச்சுட்டிருந்தேன். நீயே இந்த அங்கிளை தேடி வந்ததுல சந்தோஷம். கனடா ஓப்பன் டென்னிஸ்ல ஜெயிச்சது பெரிய காரியமில்லை. இந்த வெற்றியை நிலைநிறுத்திக்கிறதுதான் பெரிய விஷயம். மேற்கு ஜெர்மனி ஸ்டெபிகிராப், அமெரிக்கா மெக்னீல், அர்ஜென்டினா சபாடினி, இத்தாலி ரபீலா ரெகி, கனடா பாட்ரிசியா - இந்த வீராங்கனைகள் மாதிரி பேரும் புகழும் வாங்கணும்.''

''எஸ்... அங்கிள்.''

''என்னம்மா... ஒரு மாதிரி இருக்கே... ஜெயிச்ச சந்தோஷம் முகத்துல கொஞ்சம் கூட இல்லையே...''

வசுந்தரா குறுக்கிட்டுச் சொன்னாள்.

''உங்க கூட கொஞ்சம் தனியா பேசணும்.''

''பேசலாமே'' நாற்காலிகளைக் காட்டினார் ராய். வசுந்தராவும் கிருபாவும் உட்கார்ந்தார்கள்.

''என்ன விஷயம்?''

''அவர் மருத்துவமனையில் இருக்கார்.''

''யார் லட்சுமணா?''



''ஆமா.''

''என்ன உடம்புக்கு?''

''சாதாரண மாரடைப்பு.''

''அட... எப்போதிருந்து?''

விவரம் சொன்னாள் வசுந்தரா.

ராய் கவலையாய் செவிமடுத்துவிட்டு சொன்னார். ''லட்சுமணுக்கு ஆரோக்கியமான உடம்பு. கவலைப்படாதீங்க.''

''எங்க கவலையெல்லாம் இப்போ அவரைப் பற்றியில்லை...!''

''பின்னே?''

''கிருபாவுக்கு... எவனோ ஒருத்தன் போன் பண்ணி ஆபாசமா பேசறான். காது கொடுத்து கேட்க அருவெறுப்பான வார்த்தைகளைப் பேசறான்...''

ராய் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''டெலிபோன் ரோமியோவா? இதுவரைக்கும் எத்தனை தடவை போன் பண்ணியிருப்பான்?''

''இரண்டு தடவை.''

''அடுத்த தடவை போன் பண்ணும்போது, அவன் மாட்டிக்குவான். நீங்க கவலைப்படாதீங்க.''

''இந்த விஷயம்... வெளியே யாருக்கும் தெரியக்கூடாது! இந்த விவகாரத்தை நீங்களே கவனிக்கணும்.''

''லட்சுமணுக்கும் தெரியக்கூடாது இல்லையா?''

''ஆமா.''

''வீட்டு டெலிபோன் நம்பர் என்ன?''

வசுந்தரா சொல்ல, ராய் குறித்துக்கொண்டு - அருகிலிருந்த இன்டர்காம் ரிசீவரை எடுத்தார்.




பெங்களூர். ராஜப்பா அவென்யூவில் இருந்த அந்த சிறிய பங்களாவுக்கு முன் கார் நிற்க - ராம்சேகரும் பிரமிளாவும்

இறங்கிக்கொண்டார்கள்.

''இதான் உங்க மாமாவோட பங்களாவா?''

''ஆமா.''

''சின்னதாயிருந்தாலும் அழகாயிருக்கு.''

''மாமாவுக்கு ரசனை அதிகம். தானே பக்கத்திலிருந்து கட்டின பங்களா.''

இருவரும் போர்டிகோ படியேறினார்கள். உள்ளேயிருந்து அந்த வயதான தம்பதிகள் வெளிப்பட்டார்கள். கண்ணியமான தோற்றம். அத்தையின் கழுத்தில் நிறைய நகைகள்.

''வாடா ராஜா!''

''அத்தே சவுக்கியமா?''

''உங்க மாமா என்னை நல்ல வைச்சிட்டிருக்கும்போது, சவுக்கியத்துக்கு என்னடா குறைச்சல்? நீதாண்டா இளைச்சுட்டே.''

''பிரமிளா! அத்தைக்கும் மாமாவுக்கும் நமஸ்காரம் பண்ணு.''

பிரமிளா இருவரின் கால்களிலும் விழுந்து எழுந்தாள்.

அத்தைக்காரி பிரமிளாவின் கன்னங்களை வழித்து திருஷ்டி கழித்தாள்.

''ராசாத்தி! எவ்வளவு அழகா இருக்கே!'

''என் அத்தே... மருமகளுக்கு உன் கழுத்துல இருக்கிற சங்கிலியை கழட்டி போடக்கூடாதா? இதான் நீ ஆசிர்வாதம் பண்ற லட்சணமா?''

''போட்டா போகுது'' சொன்னவள் தன் கழுத்தில் இருந்த இரட்டை வடச் சங்கிலியைக் கழற்றி, பிரமிளாவின் கழுத்தில் போட்டாள்.

''இதெல்லாம் எதுக்குங்க? அவர் ஏதோ சொன்னார்ங்கிறதுக்காக...'' பிரமிளா செயினை கழற்ற முயன்றாள்.

ராம்சேகரின் மாமா தடுத்தார். ''இருக்கட்டும், போட்டுக்கோம்மா. ராம்சேகர் எனக்கு மருமகன்னா, நீ எங்களுக்கு மகள்ன்னு அர்த்தம். மாதம் பத்து நாள் இங்கே தங்கி - சந்தோஷமா இருந்துட்டு போகணும். இது உன்னோட தாய் வீடு மாதிரி...''



ராம்சேகர் குறுக்கிட்டான்.

''மாமா! எங்களுக்கு எந்த ரூம்?''

''மாடியில் முதல் ரூம். குளிச்சுட்டு சீக்கிரம் வாங்க. ஒண்ணா உட்கார்ந்து டிபன் சாப்பிடுவோம்.''

ராம்சேகர் பிரமிளாவை கூட்டிக்கொண்டு, மாடிக்குப் போனான். அறைக்குள் நுழைந்ததும் பிரமிளா பிரமித்துப் போனாள். அறை அற்புதமாய் ஒரு நட்சத்திர ஓட்டல் ரூமைப் போல் இருந்தது. ஏ.சி. - அகலமான ஃபோம் கட்டில். மார்பிள் தரை - டைல்ஸ் பதித்த சுவர்பரப்பு - பெரிய பெரிய நிலைக்கண்ணாடிகள் - தொங்கும் விளக்கு - சன்னல்களுக்கு வெல்வெட் திரைச் சீலைகள்.

''அடேங்கப்பா...'' என்றாள் பிரமிளா.

''அதான் மாமா...'' சிரித்தான் ராம்சேகர்.

''இந்த அறைக்கே லட்ச ரூபாயை செலவு பண்ணியிருப்பார்போலிருக்கே?''

''மாமா, எப்பவும் இப்படித்தான்...''

''அவருக்கு என்ன தொழில்?''

''பங்கு மார்க்கெட்டிங். நேரம் பார்த்து பங்குகளை வாங்குவார். அது உச்சத்துக்கு வரும்போது - வித்து கொள்ளை கொள்ளையா லாபம் பார்ப்பார். இன்னிக்கும் அவருக்கு இதே தொழில்தான்!''

''இவங்களுக்கு குழந்தைங்க..?''

''பிறக்கலை. அதைப்பத்தி அவங்களும் கவலைப்படலை. ஒரு பையனை தத்து எடுத்து வளர்த்தாங்க. அவனும் ஒரு விபத்துல போயிட்ட பிறகு, நமக்கு குழந்தை ராசியே கிடையாதுன்னு நினைச்சு, வேற குழந்தையை தத்து எடுத்துக்கலை...''

''பாவம்.''

''அத்தைக்கு குழந்தைகள்னா ரொம்பவும் பிரியம். எனக்கு போன் பண்ணும்போதெல்லாம், 'சீக்கிரமா ஒரு கல்யாணத்தை பண்ணிகிட்டு பேரனையோ பேத்தியையோ பெத்து கொடுடா'ன்னு சொல்லுவாங்க. இப்ப எனக்கு கல்யாணம் ஆயிடுச்சு. குழந்தையை பெத்துக் கொடுத்துடலாமா?''

சொல்லிக்கொண்டே அருகில் இருந்த ஃபோம்
மெத்தையில் அவளைத் தள்ளினான் ராம்சேகர்.
படுக்கையில் மல்லாந்து விழுந்த பிரமிளா உருண்டு -
அவன் கைக்கு கிடைக்காமல் கட்டிலின் ஓரத்துக்கு
போனாள்.
''இந்த வேலையெல்லாம் இப்ப வேண்டாம்...
ராத்திரி முழுக்க கார்ல வந்தது உடம்பு கசகசன்னு
இருக்கு... முதல்ல எனக்கு குளிக்கணும்... அப்புறம்
வயிறு நிறைய டிபன் சாப்பிடணும்... அப்புறம் இரண்டு
மணி நேரம் தூங்கணும்...''
''ஒண்ணா குளிச்சுடுவோமா?''
''அது உலக மகா ஆபத்து...'' சிரித்தவள்
உள்ளாடைகளை பொறுக்கிக்கொண்டு, பாத்ருமுக்குள்
நுழைந்தாள்.
ஷவர் பீறிடும் சத்தம் கேட்கும் வரை படுக்கையில்
படுத்திருந்த ராம்சேகர் மெல்ல எழுந்து, அறைக்
கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்.
மாடிப்படிகளில் மாமாவும் அத்தையும்
நின்றிருந்தார்கள். ராம்சேகரைப் பார்த்ததும் ஒரே
நேரத்தில் புன்னகைத்தார்கள்.
''எப்படி?'' கிசுகிசுப்பான குரலில் கேட்டான்
ராம்சேகர்.
''அபாரம்.''
''இப்பவாவது இரண்டு பேரும் நம்பறீங்களா?''
''நம்பறோம்.''
''ஏற்பாடுகள் எல்லாம்..?''
''துல்லியமா பண்ணியிருக்கோம்...''
''பிரமிளா சாதாரண பெண்ணில்லை... அதி
புத்திசாலி. அவள்கிட்டே பேசும்போதும் சரி,
பழகும்போதும் சரி, கத்தி முனையில் நடக்கிற
மாதிரியான ஜாக்கிரதை உணர்வு வேணும்...''
''எங்களுக்கு தெரியாதா என்ன?'' அந்த அத்தையும்
மாமாவும் சிரித்தார்கள்.





இரண்டு வார காலத்திற்குப்
பின் - ஒரு காலை நேரம். மணி 6.30.
ஹாலில் இருந்த டெலிபோன்
கூப்பிட பேப்பர்
பார்த்துக்கொண்டிருந்த வசுந்தரா,
எழுந்து போய் ரிசீவரை எடுத்தாள்.
''ஹலோ...''
''ஹலோ மிசஸ் வசுந்தரா...
குட்மார்னிங். நான் ராய்...''
''குட்மார்னிங் மிஸ்டர் ராய்.''
''லட்சுமண் இருக்காரா?''
''இல்லை. கிருபாவோடு வாக்கிங் போயிருக்கார்.''
''அவருடைய உடல்நிலை இப்போ எப்படி
இருக்கு?''
''நார்மலுக்கு வந்துட்டார். ஆனாலும் இதயத்துக்கு
முன்னே மாதிரி பலமில்லையாம். எந்த அதிர்ச்சியான
செய்தியையும் அவர் காதுல போடக்கூடாதாம்.''
''அப்படீன்னா... நீங்கதான் அவரை ஜாக்கிரதையா
பார்த்துக்கணும்.''
''நிச்சயமா.''
''அந்த போன்கால் மறுபடியும் வந்ததா?''
''ஆபாசமா பேசற பேர்வழியோட
போன்கால்தானே?''
''ஆமா.''
''வரலை.''
''அவன் எந்த சமயத்தில் போன் பண்ணினாலும்,
போலீஸ்ல மாட்டிக்கிற மாதிரி ஏற்பாடு
பண்ணியிருக்கேன்...''
''அவன் உஷாராயிட்டான்னு நினைக்கிறேன்.''
''இருக்கலாம்! தைரியம் அவ்வளவுதான்! உங்களுக்கு
எந்த சந்தர்ப்பத்துல என்ன உதவி தேவைப்பட்டாலும்
எனக்கு போன் பண்ணுங்க. செய்ய காத்திருக்கேன்.''
''ரொம்ப நன்றி.''
''லட்சுமணைப் பார்க்க இரண்டு நாள் கழிச்சு
வர்றேன்.''

''வாங்க'' வசுந்தரா ரிசீவரை வைத்துவிட்டு மறுபடியும் பேப்பருக்கு வந்தாள்.

பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியைப் பற்றிய செய்தியை ஆர்வமாய் படிக்க ஆரம்பித்தாள்.

இரண்டு பத்தி படித்திருப்பாள்.

வாசலில் காலிங்பெல் கூப்பிட்டது.

'இந்நேரத்திற்கு யார் வந்திருப்பார்கள்..?' யோசனையுடனே எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

லாங் கோட் அணிந்து - ஒரு இளைஞன் நின்றிருந்தான். சவரம் செய்யாத முகம். அடர்த்தியான தலைக்கேசம். ப்ழுப்பு நிற விழிகள். கையில் ஒரு சூட்கேஸ்.

''யார் வேணும்?'' வசுந்தரா கேட்டாள்.

''மிசஸ் வசுந்தரா..?''

''நான்தான்.''

''உங்ககிட்ட கொஞ்சம் பேசனும். என் பேர் அற்புதராஜ்...''

''என்கிட்ட என்ன பேசணும்?''

''உங்க மகன் கிருபாவோட காதல் விவகாரத்தைப் பத்தி பேசணும்.''

''என்ன உளர்றே..? கிருபாவோட காதல் விவகாரமா?''

அவன் - அற்புதராஜ் புன்னகைத்தான். ''மிஸஸ் வசுந்தரா! உங்க மகளோட காதல் விவகாரம் ஒரு அசிங்கமான விவகாரம். இது வெளியுலகத்துக்கு தெரியறதுக்கு முந்தி - உங்ககிட்டே சொல்லலாம்ன்னுதான் வந்தேன். உங்களுக்கு அதை தெரிஞ்சுக்கிறதுல ஆர்வம் இல்லைன்னா, நான்பாட்டுக்கு போயிட்டே இருக்கேன்.''

அவன் போவதற்காகத் திரும்பினான்.

''நில்லு...''

அற்புதராஜ் நின்றான்.

''உள்ளே... வா...''

வசுந்தரா அவனைக் கூட்டிக்கொண்டு போய் - சோபாவைக் காட்டிவிட்டு எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.



''சொல்லு... கிருபா யாரைக் காதலிக்கிறா..?''

''அவள் யாரையும் மனப்பூர்வமா காதலிச்சதில்லை... உடல்பூர்வமாத்தான் காதலிக்கிறா...''

''நீ... என்ன சொல்றே..?''

''வீட்ல டி.வி.யும் டெக்கும் எந்த ரூம்ல இருக்கு..?''

''ஏன்..?''

''இந்த கேஸட்டை போட்டுப் பார்க்கத்தான்...'' அற்புதராஜ் சொல்லிக்கொண்டே - கையோடு கொண்டு போயிருந்த சூட்கேஸைத் திறந்து - உள்ளேயிருந்து அந்த கேஸட்டை எடுத்தான்.

வசுந்தராவின் நெற்றி ஆச்சரியப்பட்டது.

''இந்த கேஸட்ல என்ன இருக்கு..?''

''போட்டுப் பார்த்தா தெரியும்...''

வசுந்தராவை பயம், பதட்டம், ஆர்வம் - எல்லா உணர்ச்சிகளும் சூழ்ந்துகொண்டது. அற்புதராஜை கூட்டிக்கொண்டு - உள்ளேயிருந்த அறைக்குப் போனாள். சுவரோரமாய் டி.வி.யும் அதற்கு கீழே - ஸ்டாண்டில் டெக்கும் தெரிந்தன.

அற்புதராஜ் டி.வி.யை நெருங்கி - அதை உயிர்ப்புக்கு கொண்டு வந்து - டெக்கின் வாய்க்குள் - தன் கையிலிருந்த கேஸட்டை திணித்து பட்டனைத் தட்டினான்.

டி.வி. திரை பிரகாசமான வெளிச்சத்திற்கு வந்து - சில விநாடிகள் நிறம் நிறமாய் கோடுகளைப் போட்டு காண்பித்துவிட்டு - திடும்மென்று குளியலறையில் ஒரு வெளிநாட்டு இளைஞனைக் காட்டியது. அவன் குளித்த கோலத்தோடு - நீர் சொட்டும் உடம்போடு - குளியலறையை விட்டு வெளியே வந்து - கட்டிலில் போர்வையை போர்த்திக் கொண்டு தூங்கும் பெண்ணிடம் வருகிறான். காமிரா பக்கத்தில் வர வர - அந்தப் பெண்ணின் முகம் திரையின் 'குளோசப்'புக்கு வந்தது.

வசுந்தரா அதிர்ந்தாள்.

அது கிருபாவின் முகம்.

அந்த இளைஞன் கிருபாவுக்கு பக்கத்தில் உட்கார்ந்து - மெல்ல அவள் உடம்பின் மேல் இருக்கும்

போர்வையை உருவினான்.

உடம்பில் ஒட்டுத்துணியில்லாமல் தெரிகிறாள் கிருபா. அந்த இளைஞன் - அவளுடைய வெறுமையான இடுப்பில் - கையை வைத்து - மெல்லத்தடவி - காமிரா ஜூம் ஷாட்டில்... மெதுவாய்...

''நோ... நிறுத்து..!''

வசுந்தரா இரண்டு கைகளாலும் தலையைப் பற்றிக்கொண்டு வீறிட்டாள். அற்புதராஜ் புன்னகையோடு - டி.வி.யை அணைத்து கேசட்டை உருவிக்கொண்டான். ஸ்தம்பித்துப்போய் நின்றிருந்த வசுந்தராவிடம் வந்தான்.

''இந்த கேஸட்ல என்ன இருக்குன்னு... இப்ப உங்களுக்கு புரிஞ்சிருக்குமே..?''

''இ... இது... இது..?''

''உங்க பொண்ணு கிருபா கனடாவுக்கு டென்னிஸ் ஆடப்போயிருந்தப்ப... மாண்ட்ரீல் நகர ஓட்டல்ல எடுக்கப்பட்ட புளூ பிலிம் கேஸட்... இந்த நீலப்படத்தில்... மொத்தம் எழுபது நிமிடம்... கிருபா இருக்கா..! இந்த கேஸட் இன்னும் மார்க்கெட்டுக்கு வரலை... நான் நினைச்சா... இந்த கேஸட்டை இன்னிக்கே மார்க்கெட்டுக்கு கொண்டுட்டு வரமுடியும்...''

வசுந்தரா அவன் மேல் பாய்ந்து சட்டையை உலுக்கினாள்.

''ராஸ்க்கல்! எம்பொண்ணை... இப்படியெல்லாம்... நாசப்படுத்தினது... யாரு..?''

''யாரும்... அவளை நாசம் பண்ணலை... உங்க பொண்ணோட முழு ஒத்துழைப்போடுதான்... காமிரா இயங்கியிருக்கு... வேணும்ன்னா... கேஸட் பூராவும் போட்டுப் பாருங்க... அவள் எப்படி ஒத்துழைப்பு கொடுத்திருக்கான்னு உங்களுக்கே தெரியும்... போட்டுக் காட்டட்டுமா?''

''வே... வேண்டாம்...''

''அதுவும் நல்லதுதான்... உங்க பொண்ணோட நீல நிற நிமிடங்களை நீங்க பார்க்காமே இருக்கிறதே நல்லது...''



''இ... இ... இந்த கேஸட்டை என்கிட்டே கொடுத்துடு...''

''கொடுத்துடறேன்... என்ன விலை தருவீங்க..?''

''நீ... நீ... சொல்ற... விலை...''

''இந்த கேஸட்டோட விலை ரொம்பவும் அதிகம்... ஏன்னா உங்க பொண்ணோட டென்னிஸ் ஆட்டத்தைப் பத்திதான்... எல்லார்க்கும் தெரியும்... இந்த காதல் களியாட்டத்தைப்பத்தி... யார்க்கும் தெரியாது..! மார்க்கெட்ல இந்த கேஸட்டை விட்டால், எப்படி இருக்கும் தெரியுமா...?''

''கேஸட்டோட விலையைச் சொல்லு...'

''கனடா ஓப்பன் டென்னிஸ் போட்டியில் - கிருபா ஜெயிச்சதுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாங்க..?''

''எட்டு லட்சம் ரூபாய்...''

''அதான் இந்த கேஸட்டோட விலை...''

வசுந்தரா அயர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.




பெங்களூர் 'லால்பார்க்'கில் வேர்க்கடலையைக் கொறித்தபடியே நடந்து கொண்டிருந்தார்கள் ராம்சேகரும் பிரமிளாவும்.

''பெங்களூர்க்கு வந்து விளையாட்டுப் போல... ஒரு வாரம் ஓடிருச்சு... எப்ப ஊருக்கு கிளம்பலாம் பிரமிளா..?''

''ஏன் அவசரமா..? இன்னும் இரண்டு நாள் இருந்துட்டு போலாம்.''

''பெங்களூர் உனக்கு அவ்வளவு பிடிச்சுப் போச்சா..?''

''எனக்கு பிடிச்சது பெங்களூர் இல்லை...''

''பின்னே..?''

''உங்க அத்தையும் மாமாவும்தான்..! பெத்த அம்மா அப்பாகூட இவ்வளவு பிரியமா இருக்க மாட்டாங்க...''

''இன்னொரு விஷயம் சொன்னால் நீ

ஆச்சரியப்படுவே...''

''என்ன...?''

''மாமா உயிலை மாத்தி எழுதப் போறாராம்...''

''மாத்தி எழுதறார்ன்னா... முதல்ல யார் பேர்ல இருந்தது... இப்ப யார் பேர்க்கு எழுதப்போறார்..?''

''முதல்ல என் பேர்க்கு... பூரா சொத்தையும் எழுதியிருந்தார். இப்ப உன்னோட பேர்க்கு பாதியை மாத்தப் போறாராம்...''

''இந்த சொத்தெல்லாம்... நமக்கு வேண்டாங்க...''

''மாமாவே பிரியப்பட்டு தர்றதை நாம ஏன் வேண்டாம்ன்னு சொல்லணும்... உயில் விஷயமா மாமாகிட்டே எதுவும் பேசிடாதே, பிரமிளா..! அவர் விருப்பப்படி உயிலை எழுதி வைக்கட்டும்..! அப்புறம் மாமா இன்னொரு யோசனையையும் சொன்னார்.''

''என்ன..?''

''நீயும் நானும் வேலைகளை ராஜினாமா பண்ணிட்டு பெங்களூர்க்கே வந்துடணுமாம். மாமாவோட பங்கு மார்க்கெட் வியாபாரத்தை நான் பார்த்துக்கணுமாம். லாபத்துல பாதி பங்கை தர்றாராம்... நீ வீட்ல அத்தைக்கு துணையா இருக்கணுமாம்...''

''அதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வருமா..?''

''ஏன் சரிப்பட்டு வராது..?''

''ஏதோ ஒரு வாரம்... வந்து தங்கினோம்... போனோம்ன்னு இருந்தாத்தான் உறவு நிலைக்கும். ஒரேடியாக வந்து தங்கிட்டா... ஏதாவது பிரச்சினைகள் வரும்...''

''மாமா... அத்தை... கிட்டே எந்த பிரச்சினையும் வராது...''

''வேண்டாங்க...! உறவுல மட்டும் என்னிக்கும் தள்ளி இருந்தாத்தான் மரியாதை...''

''ஊருக்கு போக இன்னும் இரண்டு நாள் இருக்கு...! யோசனை பண்ணிப் பாரு...''

''யோசனையே பண்ண வேண்டாம்.'' - சொன்னவள் தன் முழங்காலைப் பற்றிக் கொண்டு - அங்கிருந்த புல்வெளியில் உட்கார்ந்துவிட்டாள்.



''என்ன பிரமிளா உட்கார்ந்துட்டே..?''

''என்னால நடக்க முடியலைங்க... இரண்டு காலும் 'விண விண்'ன்னு இழுக்குது...''

''சரிதான்... தாலிகட்டின ஒரு வாரத்திலேயே... கிழவியாயிட்டியா? லால்பார்க்கை பாதிகூட சுத்தி வரலை... அதுக்குள்ளே முழங்காலை பிடிச்சுகிட்டே? ஏதாவது கூல்டிரிங்க் சாப்பிடறியா..?''

''கிடைக்குமா..?''

''அதோ... கூல்டிரிங்க் ஸ்டால்! நான் போய் வாங்கிட்டு வர்றேன். நீ இங்கேயே உட்கார்ந்திட்டிரு...''

பிரமிளா தலையாட்ட - ராம்சேகர் கொஞ்சம் தொலைவில் தெரிந்த குளிர்பான ஸ்டாலை நோக்கி ஓடினான்.

போகிற அவனையே பார்த்துக் கொண்டிருந்த பிரமிளாவின் மனதில் சில ஆச்சரியங்கள் எழுந்தன.

பெங்களூருக்கு வந்த இரண்டாம் நாளிலிருந்துதான் இந்த களைப்பு.

ராத்திரி நேரங்களில் - அடித்துப் போட்ட மாதிரி தூக்கம்.

காலையில் கண் விழித்ததும் - நெற்றியோரங்களில் எட்டிப் பார்க்கிற இம்சையான தலைவலி. குளித்ததும் வயிற்றில் கிளர்ந்தெழுகிற அகோரப் பசி. சிறிது தூரம் நடந்தாலே மூச்சிரைப்பது போன்ற உணர்ச்சி. முழங்காலில் வலி...

''எக்ஸ்க்யூஸ்மீ...''

குரல் கேட்டு நிமிர்ந்தாள் பிரமிளா.

கல்லூரி மாணவிகள் போல் - தோற்றமளித்த இரண்டு பெண்கள் சூடிதாரிலும் சல்வார் கம்மீசிலும் நின்றிருந்தார்கள்.

''எஸ்...''

இரண்டு பேரும் தங்கள் கைகளில் இருந்த சிறிய நோட்டுக்களை நீட்டிச் சொன்னார்கள். ''ஆட்டோகிராப் ப்ளீஸ்...''

''ஆட்டோகிராப்பா..?''

திகைத்தாள் பிரமிளா. ''ஆட்டோகிராப் போடுகிற

அளவுக்கு நான் வி.ஐ.பி. கிடையாது...''

இப்போது - அந்த மாணவிகள் திகைத்தார்கள்.

''நீங்கள்... டென்னிஸ் வீராங்கனை... கிருபாதானே..?''

''நோ... நோ... நான் பிரமிளா...''

அந்த மாணவிகளில் ஒருத்தி மற்றொருத்தியை பார்த்து தலையில் அடித்துக்கொண்டாள். ''நான் அப்பவே சொன்னேன்... இவங்க கிருபாவாக இருக்க முடியாதுன்னு. நீதான் கேட்கலை...''

''சாரிங்க..! நாங்க தப்பா புரிஞ்சுகிட்டோம்...''.நகர முயன்றவர்களை ''ஒரு நிமிடம்'' - என்று கூறி நிறுத்தினாள் பிரமிளா.

''அந்த கிருபா யாருன்னு சொன்னீங்க..?''

''டென்னிஸ் வீராங்கனை... கல்கத்தாவில் இருக்காங்க. அவரைப்பத்தி வெளியில யாருக்கும் தெரியாது. இப்பத்தான் கனடா ஓப்பன் டென்னிஸ் போட்டியில் ஜெயிச்சு கொஞ்சம் பிரபலம் ஆகியிருக்காங்க...''

''கிருபா என்னை மாதிரியே இருப்பாங்களா..?''

''ஆமா...! அதான் நாங்க ஏமாந்துட்டோம்... கிருபா இன்னும் பிரபலம் ஆயிட்டா... நீங்க எங்கே போனாலும் தொந்தரவுதான்... எங்களை மாதிரியே ஆட்டோகிராப் கேட்டு தொல்லை கொடுப்பாங்க...''

ராம்சேகர் குளிர்பான பாட்டிலோடு வரவும் - அந்த மாணவிகள் மறுபடியும் மன்னிப்பு கேட்டுக்கொண்டு - விடைபெற்று போனார்கள்.

பிரமிளா ராம்சேகரை சிரிப்போடு ஏறிட்டாள்.

''கேட்டீங்களா கதையை..?''

''என்ன..?''

''யாரோ கிருபாவாம்... டென்னிஸ் வீராங்கனையாம். என்னை மாதிரியே இருப்பாளாம். அவள்தான் நான்னு நினைச்சு அந்த இரண்டு பொண்ணுகளும் என்கிட்டே ஆட்டோகிராப் கேட்க வந்துட்டாங்க...''

ராம்சேகரின் முகம் லேசாய் கறுப்படித்தது. பிரமிளா தொடர்ந்து கேட்டாள். ''நீங்க அந்த கிருபாவைப் பற்றி



கேள்விப்பட்டிருக்கீங்களா?''

''இ... இல்லையே..?''

''அவள் டென்னிஸ் வீராங்கனையாம்... கல்கத்தாவில் இருக்காளாம்.''

''அவள் உன்னை மாதிரியே எப்படி இருக்க முடியும்..? வேணும்ன்னா அவள் ஜாடை உன்கிட்டே இருந்திருக்கலாம்...''

''ஆமா... நீங்க... ஏன் என்னவோ மாதிரி ஆயிட்டீங்க..?''

''ஒண்ணுமில்லையே...! இந்தா கூல்டிரிங்க்சை குடி... பாட்டிலைக் கொண்டுபோய் சீக்கிரமா ஸ்டால்காரர்கிட்டே தரணும்...''




கேஸட்டை வசுந்தராவின் முகத்திற்கு நேரே ஆட்டினான் அற்புதராஜ். சிரிப்பு கலந்த குரலில் கேட்டான். ''என்ன வசுந்தரா... அசந்திட்டீங்க..?''

''நீ கேட்கிற விலை அதிகம்...''

''உங்க பொண்ணோட மானத்தைவிடவா... பணம் பெரிசு..?''

''நான் பணத்துக்காக சொல்லலை... நீ கேட்கிற அளவுக்கு பணம் எங்ககிட்ட இல்லை...''

''பரிசுப் பணம் எட்டு லட்சம்..?''

''அது கைக்கு வர... இரண்டு மாச காலமாகும்...''

''சரி... உங்ககிட்டே தற்சமயம் எவ்வளவு பணம் இருக்கும்?''

''என்கிட்டே.... எதுவும் கிடையாது... என் கணவர் பொறுப்புலதான் எல்லாமே இருக்கு...''

''அப்படீன்னா... அவருக்கும் இந்த கேஸட்டை போட்டு காட்டிட வேண்டியதுதான்...''

''வேண்... வேண்டாம்..! இந்த விஷயம் அவருக்குத் தெரிய வேண்டாம்...''

''ஏன்..? மகளோட யோக்கியதையை அப்பாவும்

தெரிஞ்சுக்கட்டுமே...''

''வேண்டாம்... அவர் ஒரு இதய நோயாளி. இப்பத்தான் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பியிருக்கார்... அதிர்ச்சியான எந்த விஷயமும் அவருடைய காதுக்கு போகக்கூடாது...''

''ஓ...! இதுவும் எனக்கு ஒரு பெரிய பிளஸ்பாயிண்ட். மகளோட 'நீல நிற நிமிஷங்'களை... ஒரு இதய நோயாளியான அப்பாவினாலே... கண்டிப்பா தாங்கிக்க முடியாதுதான். அதுசரி... எனக்கு பணத்தை எப்படி தரப்போறீங்க... வசுந்தரா..?''

''வ... வந்து... வந்து...''

''சொல்லுங்க...''

''பேங்க் லாக்கர்ல கொஞ்சம் நகைகள் இருக்கு... அதை வேணும்ன்னா எடுத்துத் தர்றேன்...''

''கொஞ்சம் நகைகள்னா... எவ்வளவு?''

''இருபத்தஞ்சு சவரன் தேறும்...''

''அது... என்னிக்கு என் கைக்கு வரும்...''

''இன்னிக்கு காலையில பதினொரு மணிக்கு கொடுத்துடறேன்...''

''எங்கே... கொண்டுவந்து தர்றீங்க..?''

''நீயே இடத்தைச் சொல்லு... கொண்டுவந்து தர்றேன்...''

''சுக்தேவ் பானர்ஜி ஸ்கொயரில் ஒரு காளி கோயில் இருக்கு தெரியுமா..?''

''தெரியும்..!''

''கும்பல் இல்லாத கோயில்..! மத்தியானம் பனிரெண்டு மணிக்கு அங்கே இருப்பேன். தவறாமே கொண்டுவந்து கொடுத்துடணும்...''

''சரி... கேஸட்..?''

''பரிசுப் பணத்துல பாதியாவது என் கைக்கு வரணும். அப்பத்தான் கேஸட் உங்க கைக்கு வரும்...''

''என் பொண்ணுக்கும் என்னோட கணவருக்கும் தெரியாமே அந்த பணத்தை உனக்கு எப்படி தரமுடியும்..?''

''நீங்க என்ன பண்ணுவீங்களோ ஏது



பண்ணுவீங்களோ எனக்குத் தெரியாது... பரிசுப் பணத்துல பாதியாவது என் கைக்கு வந்தாத்தான்... கேஸட் உங்க கைக்கு கிடைக்கும்... இல்லேன்னா மார்க்கெட்டுக்கு போயிடும்...''

''அப்படியெல்லாம் பண்ணிடாதே...''

''பண்ணாமே இருக்கணும்ன்னா... பணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க.''

''பண்றேன்... அதுவரைக்கும்...''

''இந்த கேஸட் என் சூட்கேசுக்குள்ளேதான் இருக்கும்...! ஒரு விஷயத்தை மனசுல வைச்சுக்குங்க... என்னை போலீஸ்ல காட்டிக் கொடுத்து பிரச்சினையை தீர்த்துக்கலாம்ன்னு நினைச்சா... அது உங்க தலையில நீங்களே மண்ணைப் போட்டுகிட்டதுக்கு சமம்... என்னை போலீஸ்ல காட்டிக்கொடுத்தால் உங்க பிரச்சினை தீர்ந்துடாது... அதுக்குப் பதிலா விஸ்வரூபம் எடுக்கும்... நான் போலீஸ்ல பிடிபட்ட மறுநிமிடமே - இந்த கேஸட்டின் இன்னொரு பிரதி - என்னோட நண்பன் மூலமா மார்க்கெட்டுக்கு போயிடும்..! நான் வரட்டுமா..? உங்க கணவரும்... மகளும் திரும்பற நேரமாச்சு.., மத்தியானம் பனிரெண்டு மணிக்கு - பானர்ஜி ஸ்கொயரில் காளி கோயிலில் சந்திப்போம்...''

வசுந்தரா உணர்விழந்து போய் - ஒரு ஜடப்பொருளாய் நின்றிருந்தாள்.




ராம்சேகர், மாமாவும் அத்தையும் இருந்த அறைக்குள் நுழைந்தான். கட்டிலில் சற்று நெருக்கமாய் இருந்தவர்கள் - விலகிக்கொண்டார்கள்.

மாமா லிங்கப்பா சட்டை பட்டன்களை போட்டுக்கொண்டே சிரித்தார். ''என்ன 'லால்பார்க்'க்கு போயிட்டு வந்தாச்சா..?''

''ம்...''

அத்தைக்காரி கங்கம்மா கேட்டாள்.

''என்ன முகமெல்லாம் வாடியிருக்கு...''

''இனிமே பிரமிளாவை வெளியே கூட்டிப் போறது உசிதமில்லை...''

''ஏன்..?''

''அவளை கிருபான்னு நினைச்சு... ஆட்டோகிராப் கேட்க ஆரம்பிச்சுட்டாங்க...''

இருவரின் முகங்களும் மாறியது.

''மெள்ள பேசு... அவள் இப்போ... எங்கே... இருக்கா?''

''டாய்லெட்டுக்கு போயிருக்கா... அதான் உடனே பார்க்க வந்தேன்...''

''ஆட்டோகிராப் கேட்டது யாரு..?''

''யாரோ ரெண்டு காலேஜ் பொண்ணுங்க...''

''அப்படீன்னா கல்கத்தாவுக்கு மட்டும் பாப்புலராயிருந்த கிருபா... பெங்களூர் மாதிரியான முக்கியமான ஊர்களுக்கும் தெரிய ஆரம்பிச்சிருக்கா..?''

''ஆமா...''

''இனிமே இவளை வெளியே விடக்கூடாது...''

''வேலையை ராஜினாமா பண்றது பத்தி பேசிட்டியா..?''

''ம்... பேசினேன்... அவள் ஒத்துக்கலை...''

''எப்படியாவது... ஒத்துக்க வை... ராம்சேகர்...''

''இன்னிக்கு ராத்திரிதான் முயற்சி பண்ணனும்...''

''சரி... நீ ரூமுக்கு போ... வந்துடப்போறா...''

''அற்புதராஜ்கிட்டேயிருந்து... ஏதாவது தகவல் வந்ததா..?''

''இதுவரைக்கும் வரலை... அவனுடைய போனுக்காகத்தான் காத்திட்டிருக்கோம்... அநேகமா ராத்திரி பதினொரு மணிக்கு மேல் போன் பண்ணுவான்னு நினைக்கிறேன்.''

''இன்னிக்கும் காமிரா ஒர்க் உண்டா..?''

''உண்டு. அஸ்வின்குமார் வந்து ரெண்டு ஷெட்யூலை



தர்றதா சொல்லியிருக்கான்..! மத்ததை அப்புறம் பேசிக்கலாம் ராம்குமார்... நீ மொதல்ல ரூமுக்கு கிளம்பு. அவளுக்கு நம்ம காரியங்களில் எந்த சந்தேகமும் வந்துடக்கூடாது...'' - லிங்கப்பா சொல்ல, ராம்சேகர் கிளம்பி - மாடியிலிருந்த தன் அறைக்குப் போனான். டாய்லெட் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டாள் பிரமிளா.

''அதுக்குள்ளே எங்கே போய்ட்டீங்க..?''

''அத்தையையும் மாமாவையும் பார்க்கத்தான்...''

''எதுக்கு..?''

''ஊருக்கு கிளம்பிப் போறதைப் பத்தி பேசப் போனேன். அவங்க ஒரே பிடிவாதமா இருக்காங்க...''

''என்ன பிடிவாதம்..?''

''இங்கேயே இருந்துடச் சொல்றாங்க..! நான் லால்பார்க்ல... சொன்ன மாதிரி... நாம வேலைகளை ராஜினாமா பண்ணிடணுமாம்...''

''சரியாபோச்சு... நாளைக்கு முதல்ல ஊருக்கு கிளம்பற வழியைப் பாருங்க... உங்க அத்தையும் மாமாவும் காட்ற அன்புல... நாம இரண்டு பேரும் மூச்சுத் திணறி செத்துப் போயிடுவோம் போலிருக்கு...''

''பிரமிளா...''

''ம்...''

''அத்தையும் மாமாவும் சொல்றதுதான் சரின்னு என் மனசுக்குப்படுது... அவங்க சொல்றபடி இங்கேயே இருந்துடலாமே..? நாம இங்கே இருந்தா அவங்களுக்கும் உதவியா இருக்கும்..! அந்த பிரைவேட் ஆபீசில் வேலை பார்த்து... எப்ப... முன்னுக்கு வரப்போறோம்..? மாமாவோட பங்கு மார்க்கெட் தொழிலை பார்த்துகிட்டா... வசதியா இருக்கலாம்...''

''எனக்கு விருப்பமில்லீங்க..! நாளைக்கு நாம ஊருக்கு கிளம்பறோம்... உங்க அத்தைகிட்டேயும், மாமாகிட்டேயும் கண்டிப்பா சொல்லிடுங்க...''

'இவளை எப்படி வழிக்கு கொண்டு வருவது..?'

யோசித்தபடி தலையைக் கீறினான் ராம்சேகர்.




பானர்ஜி ஸ்கொயரில் - ஒரு ஆலமரத்துக்கு கீழே பரவியிருந்த காளி கோயிலுக்கு கொஞ்சம் தள்ளி - காரை நிறுத்தினாள் வசுந்தரா. காரிலிருந்து இறங்காமல் - சுற்றும் முற்றும் பார்த்தாள். அந்த மத்தியான நேரத்தில் ஆள் நடமாட்டம் இல்லாமல் - அந்த பிராந்தியமே வெறிச்சோடிப் போயிருந்தது. கல்கத்தாவின் புறநகர்ப் பகுதி அது.

காரில் இருந்து இறங்கிய வசுந்தரா - கோயிலுக்குள் நுழைந்தாள். காவியுடை தரித்த - இரண்டு தாடி சாமியார்கள் - கோயில் மண்டபத்தில் தூங்கிக்கொண்டிருக்க - அற்புதராஜ் ஒரு திட்டில் உட்கார்ந்திருந்தான்.

வசுந்தரா அவனை நோக்கிப் போனாள்.

''ஒரு பத்து நிமிடம் லேட்டாயிடுச்சு...''

''பரவாயில்லை... நகை எங்கே..?''

''இதோ...'' கையில் வைத்திருந்த கர்ச்சீப்பால் கட்டிய ஒரு சிறு மூட்டையை அவனிடம் கொடுத்தாள் வசுந்தரா.

''எவ்வளவு சவரன்..?''

''இருபத்தஞ்சு சவரன் தேறும்...''

''இது முதல் தவணை. அடுத்த தவணையான பரிசுப் பணம் என் கைக்கு வருகிற வரைக்கும் கேஸட் என்கிட்டதான் இருக்கும்...''

''கேஸட்... வெ... வெளியே...''

''போகவே போகாது... என்னோட செக்ஷன் இரும்புக்கோட்டை மாதிரி. நீங்க எந்த அளவுக்கு என்கிட்டே உண்மையா நடந்துக்கறீங்களோ... அதே அளவுக்கு நானும் நடந்துக்குவேன்... நீங்க கொஞ்சம் தடம் புரண்டாலும்... உங்க மகள் வாழ்க்கையே நாசமாயிடும். போங்க... போய் புத்திசாலித்தனமா நடந்துக்குங்க...''

''உன்னை... மறுபடியும்... எப்போ..?''



''அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம்... நானே டெலிபோன்ல தொடர்புகொள்ளுவேன். இல்லேன்னா யாரும் இல்லாத நேரத்துல - திடும்ன்னு உங்க முன்னாடி வந்து நிப்பேன்...''

வசுந்தரா போவதற்காகத் திரும்பினாள்.

அதிர்ந்தாள்.

கோயிலுக்குள் கிருபா நுழைந்து கொண்டிருந்தாள்.




''டொக்... டொக்...''

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு - எழுந்துபோய் கதவைத் திறந்தாள் பிரமிளா. அத்தை கங்கம்மா டிரேயில் ஏந்திய பால் தம்ளர்களோடு நின்றிருந்தாள். கேட்டாள்.

''ராம்சேகர் தூங்கிட்டானா..?''

''இல்ல... புத்தகம் படிச்சிட்டிருக்கார்..! உங்களுக்கு ஏம்மா சிரமம்..? சொல்லியிருந்தா நானே சமையல்கட்டுக்கு வந்து இருப்பேனே..?''

''இருக்கட்டும்... பரவாயிலலேம்மா... நீ இந்த வீட்டுக்கு வந்த விருந்தாளி. உன்னை வேலை வாங்கலாமோ..?'' டிரேயை அவளிடம் கொடுத்துவிட்டு கீழே இறங்கிப் போனாள் கங்கம்மா. பிரமிளா கதவைச் சாத்தி தாழிட்டுவிட்டு - புத்தகம் ஒன்றை புரட்டிக்கொண்டிருந்த ராம்சேகரை நெருங்கினாள்.

''பால் வந்தாச்சு...''

''பால் வந்தாச்சுன்னா... மணி சரியா பத்துன்னு அர்த்தம்...''

''இந்தாங்க... உங்களுக்கு ராகிமால்ட் கலந்த பால்...'' பிரமிளா ஒரு தம்ளரை எடுத்து நீட்ட - அதை வாங்கிக்கொண்டே கேட்டான் ராம்சேகர்.

''ஆமா... நீ மட்டும் ஏன் வெறும் பாலையே சாப்பிடறே..? அதுல பூஸ்ட், போர்ன்விட்டா...ன்னு

எதையாவது சேர்த்துக்கலாமில்லையா..?''

''வெறும் பால்ல அளவா சர்க்கரை சேர்த்து... பதமான... சூட்ல... சாப்பிடறப்போ இருக்கிற சுவை... வேற எதுக்குமே வராதுங்க... அதிலும் உங்க அத்தை வீட்டுப் பால்... தனி சுவை... சாப்பிட்ட கொஞ்ச நேரத்திலேயே தூக்கம் வந்துடும்...''

சிரித்துப் பேசிக்கொண்டே இருவரும் பால் நிரம்பிய தம்ளர்களை காலி செய்தார்கள். பிரமிளா கேட்டாள்.

''இன்னும் புத்தகம் படிக்கப் போறீங்களா..?''

''ஆமா...''

''அதென்ன புத்தகம்..?''

''மாமா கொடுத்தார். பங்கு மார்க்கெட் பத்தின புத்தகம்... இந்த புத்தகத்தை நான் படிச்சேயாகணும்ங்கிறது... மாமாவோட ஆர்டர்...''

''சரி... நான் தூங்கறேன்...''

''தூங்கு...''

வாஷ்பேசினில் வாய் கொப்பளித்துவிட்டு - படுக்கையில் விழுந்தாள் பிரமிளா. நைட் கவுனுக்குள் உடம்பின் ஏற்ற இறக்கங்கள் - வளைவுக்குள் துல்லியமாய் தெரிந்தன. பெட்ஷீட்டை எடுத்து கழுத்து வரைக்கும் போர்த்திக் கொண்டவள் - ராம்சேகர் புத்தகத்தின் அடுத்த இரண்டு பக்கங்களை படித்து - முடிப்பதற்குள் தூங்கிப் போனாள்.

அவன் மெதுவாய் கூப்பிட்டுப் பார்த்தான்.

''பிரமிளா...''

''......''

''பிரமிளா...''

''......''

தோள்பட்டையை உசுப்பினான். உடம்பு எதிர்ப்பில்லாமல் ஆடியது. புத்தகத்தை டீபாயின் மேல் வைத்துவிட்டு - அருகிலிருந்த இண்டர்காம் ரிசீவரை எடுத்தான். பட்டனைத் தட்டிவிட்டு ''ஹலோ'' என்றான்.

கீழே ஹாலிலிருந்து லிங்கப்பா கேட்டார்.

''என்ன தூங்கிட்டாளா..?''

''ஆமா...''



''இன்னிக்கு அரை வில்லை அதிகமாவே... பால்ல போட்டு கொடுத்திருக்கு ராம்சேகர்... ஏன்னா இன்னிக்கு இரண்டு ஷெட்யூல் இருக்கு...''

''அஸ்வின்குமார் வந்தாச்சா..?''

''வந்தாச்சு... இப்ப மேல வந்துடறோம்...''

இரண்டு நிமிடம் கழித்து - லிங்கப்பா, கங்கம்மா, அஸ்வின்குமார் - மூன்று பேரும் வந்தார்கள். அஸ்வின்குமார் ஆங்கிலோ இந்திய கலவையில் இருந்தான். செம்பழுப்பு கிராப். வெளிநாட்டவர்களுக்கே உரித்தான தக்காளி நிறம். தோளில் யூமேட்டிக் வீடியோ காமிரா.

ராம்சேகர் வீடியோ காமிராவை வாங்கிக்கொள்ள கங்கம்மா அறையில் இருந்த பிரகாசமான விளக்குகளை போட்டாள். லிங்கப்பா அறைக்கதவைத் தாழிட்டுவிட்டு சுவரோரமாய் ஒரு நாற்காலியை இழுத்து போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

அசுவின்குமார் - கட்டிலில் தவழ்ந்து போய் - ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த - பிரமிளாவுக்கு பக்கத்தில் போய் படுத்தான்.

ராம்சேகரின் கையிலிருந்த வீடியோ காமிரா 'விர்ர்'ரென்று இயங்க ஆரம்பித்தது. பத்தே கால் மணிக்கு ஆரம்பித்த அந்த 'ர்ர்ர்ர்' சத்தம் விடிகாலை நான்கு மணி வரையில் கேட்டுக்கொண்டிருந்தது.




**கோ**யிலுக்குள் நுழைந்து கொண்டிருந்த கிருபாவை பார்த்ததும் - அற்புதராஜூம் திடுக்கிட்டான். கிருபா வசுந்தராவை நெருங்கினாள்.

''யாரம்மா... அந்த ஆள்..?''

''அது... அது... வந்து... வந்து...''

மார்புக்கு குறுக்காய் கைகளைக் கட்டிக்கொண்டான் கிருபா. ''பேங்க்குக்கு போய் லாக்கரைத் திறந்து நகைகளை

எடுத்திருக்கே..! அந்த நகையெல்லாம் இப்ப அந்த ஆள் கையில இருக்கு... இதுக்கு என்னம்மா அர்த்தம்..?''

அற்புதராஜ் புன்னகையோடு - கிருபாவை நெருங்கி நின்றான். ''அதுக்கான அர்த்தத்தை நான் சொல்றேன் கிருபா... வீணா உங்கம்மா மேல... ஆத்திரத்தையும் கோபத்தையும் காட்டாதே...''

கிருபா அவனிடம் ஒரு சின்னப் புயல் மாதிரி திரும்பினாள்.

''யார்... நீ..?''

''என் பேர் அற்புதராஜ்...''

''எங்கம்மாகிட்டயிருந்து எதுக்காக நகைகளை வாங்கினே..?''

''நீ பண்ணின தப்புக்கு... உங்கம்மா கட்டின அபராதம்.''

''அபராதமா..?''

''ஆமா...''

''என்ன உளர்றே..? நான் என்ன தப்பு பண்ணினேன்?'' அற்புதராஜ் சிரித்தான். ''நீ பண்ணின தப்பு என்னான்னு உனக்கு தெரியாதா..?''

''தெரியாது...''

''தெரியாது..?''

''தெரியாது...''

''நீ கனடா போயிருந்தப்ப... மாண்ட்ரில் ஓட்டல்ல நீ செலவழிச்ச 'நீல நிற நிமிடங்கள்' கேஸட் வடிவத்தில் இப்போ என்கிட்டே இருக்கு...''

கிருபாவின் அழகிய முகம் குழப்பத்தில் விழுந்தது.

''நீல நிற நிமிடங்களா..?''

''ஆமா...''

''அப்படீன்னா..?''

''உங்கம்மாவைக்கேளு..! மிஸஸ் வசுந்தரா... உங்க பொண்ணு கேக்கிறா... நீல நிற நிமிடங்கள்ன்னா... என்னான்னு கொஞ்சம் விளக்கி - சொல்லிடுங்க...''

வசுந்தரா கண்களில் நீர் மல்க - கிருபாவைப் பார்த்து பேச முயன்று - முடியாமல் - சேலைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டாள்.

அற்புதராஜ் சிரித்தான். ''பாவம்...! பெத்த தாய் தன்னோட வாயாலே அதைச் சொல்ல முடியாதுதான்... நானே சொல்றேன்...''



கிருபா அவனிடம் திரும்பினாள்.

''நீ நடித்த நீலப்படம் என்கிட்டே இருக்கு...''

''எ... ன்... ன... து..?''

''நீலப்படம்! ஓ...! நீலப்படம்ன்னா உனக்கு புரியாது..? புளூபிலிம்...''

''எ... என்னடா... சொல்றே... புளூ பிலிமா..?''

''ஆமா...''

''அ... அதுல... நா... நான் நடிச்சிருக்கேனா..?''

''ஆ... மா...''

''அ... அம்மா... இ... இவன் என்ன சொ... சொல்றான்..?''

''உங்கம்மாவுக்கு காலையிலதான் கேஸட்டை போட்டுக் காட்டினேன். நீயும் ஒரு வெளிநாட்டு ஆசாமியும்... அப்பட்டமா நடிச்சிருக்கீங்க... மொத்தம் தொண்ணூறு நிமிடம் ஓடற கேஸட்...! நீயும் பார்க்க விரும்பினா... ஏற்பாடு பண்றேன்...''

கிருபா வசுந்தராவின் தோள்பட்டையைப் பிடித்து உலுக்கினாள். ''இவன் என்னம்மா... சொல்றான். எனக்கு பயம்மா இருக்கு... புளூ பிலிமில் நானாவது நடிக்கிறதாவது..?''

வசுந்தரா நிமிர்ந்தாள் கண்ணீரோடு. ''அவன்... சொ... சொல்றது உண்மைதான் கிருபா... அந்த பிலிமில் நீதான் இருக்கே...''

''நோ... இருக்க முடியாது...''

அற்புதராஜ் மெல்லச் சிரித்தான்.

''நீ நம்பணும்ன்னா... கேஸட்டை பார்க்கிறதைத் தவிர வேற வழியில்லை... உன் வீட்டுக்குப் போய்... கேஸட்டைப் போட்டு பார்த்துடலாமா..?''

''வாடா... வா..! அந்த கேஸட்டை போட்டுக் காட்டு...'' கிருபா வெறித்தனமாய் கூச்சலிட - கோயில் மண்டபத்தில் படுத்து தூங்கிக்கொண்டிருந்த - இரண்டு சடை முடி சாமியார்களும் எழுந்து உட்கார்ந்து பார்த்தார்கள்.

வசுந்தரா மகளிடம் திரும்பினாள். ''கிருபா...! அந்த

கேஸட்டை நீ பார்க்க வேண்டிய அவசியமே இல்லை... அதுல நீதான் இருக்கே...''

''கேஸட்டை பூராவும் பார்த்தியாம்மா..?''

''இல்லே... முதல்ல... கொஞ்சம்...''

''உன்னிப்பா பார்த்தியா..? அதுல வந்த முகம் என்னோடது... தானா..?''

வசுந்தரா விழித்தாள்.

கிருபா தொடர்ந்தான். ''உன்னோட கண்களை இவன் ஏமாத்தியிருக்கான்மா..! அந்த கேஸட்டை நான் பார்த்தா கண்டு பிடிச்சுடுவேன்... இப்பவே வீட்டுக்குப் போகலாம்... வெட்கத்தைவிட்டு அம்மாவும் மகளுமா... ஒண்ணா உட்கார்ந்து அந்த கேஸட்டை பார்ப்போம்... அதுக்கப்புறம் அந்த கேஸட் இவனுக்கு எப்படி கிடைச்சிருக்கும்ங்கிற வரலாறை நான் சொல்றேன்...''

அற்புதராஜ் சிரித்தான்.

''அந்த வரலாறை நீ தாராளமா என்கிட்டே சொல்லலாம்.''

''கிருபா! இந்நேரத்துல உங்கப்பா வீட்ல இருப்பாரே..?''

''அப்பா ஒரு வேலையா வெளில போயிருக்கார்... நாலு மணிக்கு மேல்தான் திரும்புவார். வரும்போது பங்களாவை பூட்டிகிட்டுதான் வந்தேன்...''

சட்டையின் மார்புப் பகுதிக்குள் கையை நுழைத்து கேஸட்டை எடுத்தான் அற்புதராஜ். ''கேஸட் ரெடி. போலாமா..?''

மூவரும் கோவிலுக்கு வெளியே நிறுத்தியிருந்த - காரை நோக்கிப் போனார்கள். வசுந்தரா தளர்ந்துபோய் - அழுகையோடு நடந்தான்.




காலை மணி ஏழே முக்கால்.

லிங்கப்பாவின் அறைக்குள் நுழைந்தான் ராம்சேகர். கண்ணாடி முன் நின்று எலக்ட்ரிக் ரேசரால் -



மோவாயை மழமழப்புக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்த லிங்கப்பா கேட்டார்.

''என்ன பிரமிளா எழுந்திரிச்சுட்டாளா..?''

ராம்சேகர் சிரித்தான். ''இப்ப அவள் எழுந்திரிக்கிற மாதிரியில்லை... மரக்கட்டை மாதிரி படுத்து தூங்கிட்டிருக்கா...''

''அஸ்வின்குமார்கிட்டே முரட்டுத்தனம் அதிகம்...''

''ஆனால் 'நீலப்' படத்துல அவனை மாதிரி ரசனையோடு நடிக்க ஆளில்லை... இதுவரைக்கும் மொத்தம் எத்தனை கேஸட் சேர்ந்திருக்கு..?''

''எட்டு...''

''அற்புதராஜ்கிட்டே இருக்கிற கேஸட்டையும் சேர்த்தா ஒன்பது இல்லையா..?''

''ஆமா...''

கங்கம்மா சமையலறையில் இருந்து வெளிப்பட்டாள். சொன்னாள். ''கல்கத்தா போன அற்புதராஜ்கிட்டேயிருந்து எந்தவிதமான தகவலும் இல்லை... முந்தா நாள் ராத்திரி கல்கத்தா போய்ச் சேர்ந்ததும் - போன் பண்ணிப் பேசினான்... அவ்வளவுதான்... அதுக்கப்புறம் தகவலே இல்லை... கிருபாவோட அம்மாவைப் பார்த்து - கேஸட்டை போட்டுக்காட்டினானா இல்லையான்னு தெரியலை...''

''அற்புதராஜ் விஷயத்துல... நீ சந்தேகமே படவேண்டாம்... அவன் எடுத்த காரியத்தை முடிச்சுட்டு வர்றதுல கில்லாடி...''

''வசுந்தரா அற்புதராஜ் சொல்ற டிமாண்டுக்கு ஒத்துக்குவாளா? இல்லே போலீசுக்கு போயிடுவாளா..?''

''போலீசுக்கு அவளாலே எப்படி போக முடியும்..? பொண்ணு பிறந்த கோலத்துல நீலப் படத்துல நடிச்சிருக்கா...! விஷயத்தை பகிரங்கத்துக்கு கொண்டுவர அவளுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு...''

''எனக்கொரு சந்தேகம்...''

''என்ன..?''

''தன் பொண்ணோட உடம்புக்கும், பிரமிளா உடம்புக்கும் உள்ள ஏதாவது ஒரு வித்தியாசத்தை அந்த வசுந்தரா கண்டுபிடிச்சுட்டா..?''

ராம்சேகர் சிரித்தான். ''எந்த வித்தியாசத்தையும் கண்டுபிடிக்க முடியாதபடிக்கு - காமிராவை கையாண்டு இருக்கேன். பிரமிளாவோட இடதுபக்க 'போஸ்' மட்டும் கிருபாகிட்டயிருந்து மாறுபட்டிருக்கும். காமிரா கோணத்தை - வலது பக்கமாவே வைச்சு எடுத்திருக்கிறதுனால... எந்த வித்தியாசத்தையும் யாராலேயும் கண்டு பிடிக்க முடியாது...''

''சரி...! அவள் இன்னிக்கு ஊருக்கு போக பிடிவாதம் காட்டினா நீ என்ன பண்ணப் போறே... ராம்சேகர்.''

''கைவசம் ஒரு யோசனை இருக்கு...''

''என்ன..?''

''அவள் தூங்கி எழுந்திரிச்சதும், நான் பாத்ரூமுக்கு குளிக்கப் போவேன். கொஞ்ச நேரத்துல பக்கெட்டை உருட்டி விட்டுட்டு அம்மான்னு குரல் கொடுப்பேன். அவள் ஓடிவந்து பார்க்கும்போது - கீழே விழுந்து கிடப்பேன். வலது கையில அடிபட்டு சுளுக்கி கிட்டதா சொல்லி - இரண்டு நாள் இங்கேயே ஓய்வு எடுத்துக்க - ஏற்பாடு பண்ணிடுவேன். என் சுளுக்காத கைக்கு கங்கம்மாதான்... எண்ணெய் போட்டு நீவி விடணும்...''

''பிரமிளா இன்னும் இரண்டு ராத்திரி இருந்தா போதும்... நாலைஞ்சு கேஸட்டாவது... பிரிப்பேர் பண்ணிடலாம்...''

''அஸ்வின்குமார் இன்னிக்கு ராத்திரியும் வர்றேன்னு சொல்லியிருக்கான்...''

''பிரமிளாவை எப்படியும்... இன்னும் இரண்டு நாளாவது இங்கே தங்க வைச்சாகணும்...''

''சரி... நீ ரூமுக்குப் போ... அவள் கண் விழிக்கிற நேரம். பெண்டாட்டிக்கு பக்கத்துல நின்னு குட்மார்னிங் சொல்ல வேண்டாமா..?''

''எனக்கு காப்பி வேணும்... கங்கம்மா. அதுக்காகத்தான் கீழே வந்தேன்...''

''அப்படி ஒரு நிமிடம் உட்கார்... கொண்டாந்து



தர்றேன்...'' சொன்ன கங்கம்மா, உள்ளே போய் காப்பியை கொண்டுவந்து கொடுக்க - அதை காலி செய்துவிட்டு மாடிக்கு போனான்.

பிரமிளா - மல்லாந்த நிலையில் - வாய் பிளந்து - இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தாள்.




வசுந்தரா கண்ணீரில் நனைந்த விழிகளை மூடிக்கொண்டு - சோபாவுக்கு சாய்ந்துகொள்ள - டெக்கின் வாய்க்குள் கேஸட்டை திணித்து - டி.வி.யின் திரையை உயிர்ப்புக்கு கொண்டுவந்து பட்டனைத் தட்டினான் அற்புதராஜ்.

கிருபா விரல் நகத்தை பதட்டமாய் கொறித்தபடி - டி.வி. திரையையே வெறித்துப் பார்க்க - கேஸட் ஓடியது.

விழிகள் விரிய இரண்டு நிமிடம் பார்த்தவள் - எழுந்து சென்று டெக்கை அணைத்தாள். அற்புதராஜ் சிரித்தான்.

''என்ன கிருபா... உனக்கே பார்க்க பிடிக்கலையா..?''

கிருபா அவனை ஏறிட்டாள். ''இந்த கேஸட் உனக்கு எப்படி கிடைச்சது..?''

''அதைப்பத்தியெல்லாம் உன்கிட்ட நான் சொல்றது அநாவசியம்..! நீ பண்ணின தப்பு இப்போ என்கிட்டே கேஸட் வடிவத்தில் இருக்கு... நான் நினைச்சிருந்தேன்னா... இதை மார்க்கெட்ல விட்டு... உன்னோட வீட்டு கவுரவத்தை நாசம் பண்ணியிருப்பேன்...''

''சரி... இந்த கேஸட்டுக்கு என்ன விலை..?''

''நீ வாங்கப் போகிற பரிசு பணத்துல பாதியாவது...''

''அந்தப் பணம் கைக்கு கிடைக்க இரண்டு மாசமாகும்...''

''தெரியும்... அந்தப் பரிசுப் பணம் வருகிறவரைக்கும் இந்த கேஸட் என்கிட்டத்தான் இருக்கும்...''

''சரி... எங்கிட்டே கொஞ்சம் நகைங்க இருக்கு...

கிட்டத்தட்ட ஐம்பது பவுன் தேறும். கொடுத்துடறேன்... கேஸட்டை தந்துடறியா..?''

''முதல்ல நகைகளைக் கொண்டா பார்க்கலாம்...''

''கி... கிருபா...''

வசுந்தரா குரல் கொடுத்ததை பொருட்படுத்தாமல் - பக்கத்திலிருந்த பீரோவை நோக்கிப் போனாள் கிருபா. பீரோவின் கதவை விரித்து - உள்ளேயிருந்த லாக்கர் கதவைத் திறந்து - உள்ளே கையை நுழைத்து வெளியே எடுத்தாள்.

விரல்களில் மெட்டாலிக் ரிவால்வர் மின்னியது.

டெக்கின் வாயிலிருந்து கேஸட்டை எடுத்து - சட்டையின் மார்புப் பகுதிக்குள் பதுக்கிக் கொண்டிருந்த அற்புதராஜ் - கிருபாவின் கையில் முளைத்திருந்த பிஸ்டலைப் பார்த்ததும் முகம் வியர்த்தான்.

''ஏ... ஏய்... என்ன இது..?''

''நீ... பார்த்ததில்லை..? ரிவால்வர்...''

''கி... கி... கிருபா...! விளையாடாதே...''

''விளையாடறது நானில்லை... நீதான்...''

வசுந்தரா பதறினாள். ''கிருபா! அவனை ஒண்ணும் பண்ணிடாதே... அவனுக்கு ஏதாவது ஒரு ஆபத்துன்னா... வெளியே இருக்கிற அவனோட கூட்டாளி... இன்னொரு பிரதி கேஸட்டை மார்க்கெட்ல விட்டுடுவான்...''

''அம்மா... நீ பேசாமே உட்கார்..! இந்த அயோக்கிய ராஸ்கலை எப்படி சமாளிக்கணும் என்கிறது எனக்குத் தெரியும்... அந்த நீலப்பட கேஸட்டில் இருக்கிறது நிச்சயமா நானில்லை... என்னோட உடம்பைப் பத்தி எனக்குத் தெரியாதா என்ன..? அது வேற பெண்...''

அற்புதராஜ் மெல்ல - இரண்டடி பின்வாங்க - கிருபா உறுமினாள். ''இருக்கிற இடத்தைவிட்டு நீ இம்மியளவு அசைஞ்சாலும்... உன்னோட வலது கணுக்கால் காணாமே போயிடும்...''

அவன் நின்றான்.

கிருபா சற்று பாதுகாப்பான தூரத்தில் நின்றுகொண்டு கேட்டாள்.

''கேஸட்டில் இருக்கிற பெண் யாரு..?''



''நீ... நீதான்...''

''சரி... நானாகவே இருக்கட்டும். உனக்கு இந்த கேஸட் எப்படி கிடைச்சது..?''

அற்புதராஜ் சீறினான். ''இதோ பார் கிருபா..! எனக்கு ஏதாவது ஒரு ஆபத்துன்னாலும் சரி... போலீஸ்ல மாட்டிகிட்டாலும் சரி... உன்னோட வாழ்க்கையும் பாதிக்கப்படும்... இந்த ஒரு கேஸட்டோடு உன்னோட பிரச்சினை முடிஞ்சுடப் போறதில்லை... என் கூட்டாளிகிட்டே இன்னொரு கேஸட்டும் இருக்கு...! அது மார்க்கெட்டுக்கு வர ரொம்ப நேரமாயிடாது...''

''நீ சொல்றதைக் கேட்டு எங்க அம்மா பயப்படலாம். ஆனால் நான் பயப்படமாட்டேன்... நான் பயப்படாததுக்கு காரணம் என்ன தெரியுமா..? நான் தப்பு பண்ணலை... அந்த கேஸட்டில் இருக்கிறது நானில்லை...''

''இப்படியெல்லாம் சொல்லி உன்னை நீயே ஏமாத்திக்க முடியாது கிருபா... கேஸட்டில் இருக்கிறது நீயில்லைன்னு மறுத்தாலும்... மார்க்கெட்டுக்கு வந்த பின்னாடி மக்கள் ஒத்துக்கணுமே...''

''அது என்னோட... இரண்டாவது பிரச்சினை. நீ ஏவிவிடப்பட்ட அம்பு. எந்த திசையிலிருந்து இந்த அம்பு வந்ததுங்கிறதைக் கண்டுபிடிக்க... எனக்கு ரொம்ப நேரம் ஆகாது...''

அற்புதராஜ் அயர்ந்து கொண்டிருக்கும் போதே - கிருபா வசுந்தராவிடம் திரும்பினாள்.

''அம்மா...! உதவி கமிஷனர் ராய்க்கு போன் பண்ணு...''

''கிருபா! வேண்டாண்டி...! இந்த விவகாரம் வெளியே வர்றது அவ்வளவு நல்லாயில்லை... அவன் கேட்கிற பணத்தைக் கொடுத்துட்டு...''

''முட்டாள்தனமா உளறாதேம்மா...! இன்னிக்கு இவன் பணத்தை கேட்கிறான். நாளைக்கு... என்னையே கேட்பான். கொடுத்துடுவியா..?''

''கி... ரு... பா...''

''போய்... போன் பண்ணு...''

வசுந்தரா - வியர்த்து - எச்சில் விழுங்கியபடியே -

தடுமாற்றமாய் நடந்து டெலிபோனை நோக்கிப் போனாள்.

அற்புதராஜ் மெல்ல நகர்ந்தான்.

கிருபா கத்தினாள். ''நகராதே! இதான் உனக்கு கடைசி எச்சரிக்கை. இனிமேல் நகர்ந்தால் நிச்சயமா சுடுவேன்...''

அற்புதராஜ் மிரண்ட விழிகளில் - ரிவால்வரையே பார்த்துக் கொண்டிருக்க - கிருபா கேட்டாள். ''எனக்கும் எங்கம்மாவுக்கும் போன் பண்ணி - அசிங்கமா பேசினது நீதானே...''

''......''

''ம்... சொல்லு... உன்னை சுலபமா சுட்டு என்னால காயப்படுத்த முடியும்... இரத்தம் சிந்தாமே பதிலைச் சொல்லு...''

''ஆமா... நான்தான்...''

''இதே மாதிரி... இப்ப நான் கேட்கப் போகிற எல்லா கேள்விகளுக்கும் 'பளிச் பளிச்'ன்னு பதிலைச் சொல்லணும்..! அந்த கேஸட்ல இருக்கிற பொண்ணு யாரு..?''

''அ... அவள்... அவள்...''

''ம்... சொல்லு...''

''வந்து... வந்து...'' என்று வேண்டுமென்றே பேச்சை இழுத்த அற்புதராஜ் எதிர்பாராத ஒரு விநாடியில் -

குபீரென்று சோபாவுக்குப் பின்னால் பாய்ந்து - அதன் பின்னால் மறைந்தபடி - முழுவேகத்தோடு தள்ளிவிட்டான்.

சோபா குப்புற விழ - கைக்கு கிடைத்த டீபாயை எடுத்து கிருபாவின் மேல் வீசினான். அது கிருபாவைத் தாக்க - அவள் நிலைகுலைந்தாள்.

அற்புதராஜ் ஓடினான்.

எதிர்ப்பட்ட பொருள்களை உதைத்து - கதவைத் திறந்துகொண்டு ஓடி - இடது பக்கமாய் தெரிந்த - காம்பவுண்டு சுவரை நோக்கிப் பாய்ந்தான். குரோட்டன்ஸ் செடிகள் மிதிபட - ரோஜா தொட்டிகள் சரிந்தன.

அற்புதராஜின் அடிவயிற்றில் பயம் கவ்வியது. 'அவள்



எந்த விநாடியும் துரத்திக் கொண்டு வந்து சுடலாம்...'

'கிருபா சாதாரணப் பெண்ணில்லை. எதற்கும் துணிந்தவள். அவளுடைய அம்மாவிடம் இருந்த பயம் இவளிடம் இல்லை...'

'திட்டம் பாழ்!'

'லிங்கப்பாவுக்கு போன் போட்டு பேசிவிட்டு - தலைமறைவாகிவிட வேண்டியதுதான். வசுந்தரா கொடுத்த நகைகளை வைத்துக் கொண்டு - ஒரு வருட காலத்தை ஓட்டிவிடலாம்...'

பின்னால் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

போர்டிகோவில் கிருபாவின் முகம். ஓடிவருவது தெரிந்தது. 'ரிவால்வர் எந்த நிமிடமும் கனைக்கலாம்.'

உடம்பு பூராவும் மயிர்க்கால்கள் சிலிர்த்துக்கொள்ள - அற்புதராஜ் அசுரவேகத்தில் ஓடி - காம்பவுண்டு சுவரின் மேல் தாவி - மறுபக்க ரோட்டின் வளைவில் குதித்தான்.

குதித்தவன் நிலைதடுமாறி - உருண்டு -

எழுந்துகொள்வதற்குள் -

கான்கிரீட் கம்பிகளை டன் கணக்கில் ஏற்றிக்கொண்டு - முழு வேகத்தோடு திரும்பிய - அந்த லாரி அவனை நீளமாய் - சிவப்பு பெயிண்ட்டில் தோடிழுத்த மாதிரி தேய்த்தது.




பிரமிளா கண்விழித்தபோது காலை எட்டரை மணி. மெல்ல எழுந்து உட்கார்ந்தவளின் பார்வையில் - காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த ராம்சேகர் பட்டான். சொன்னான். ''குட்மார்னிங்... பிரமிளா...''

''குட்மார்னிங்...''

''என்ன பலமான தூக்கமா..?''

''மணி எவ்வளவுங்க..?''

''எட்டு முப்பத்தி ஒன்னு...''

''சாரி! அசந்து தூங்கிட்டேன்...! நீங்களாவது என்னை

எழுப்பியிருக்கலாமில்லையா..?''

''எழுப்ப மனசு வரலை...''

''ஆமா... இராத்திரி தூக்க கலக்கத்துல... நீங்க... சும்மாவே இருக்க மாட்டீங்களா..? தினசரி... இதே மாதிரி...! உடம்பு என்னத்துக்கு ஆகும்..?''

''உ... உனக்கு ஞாபகம் இருந்ததா..?''

''ம்... ஆனால்... கண்ணைத்தான் விழிச்சுப் பார்க்க முடியலை... கொஞ்சம் கண்ணைத் திறந்தாலும் கூசற மாதிரி இருக்கு...''

''......''

''எவ்வளவு நேரம் தூங்கினாலும் தலை 'திம்'ன்னே இருக்கு... என்னான்னு தெரியலை...'' சொல்லிக்கொண்டே கட்டிலைவிட்டு - இறங்கி பாத்ரூமை நோக்கிப் போனவளை இமைக்காமல் பார்த்தான் ராம்சேகர்.

'இவளுக்கு உண்மை தெரிகிறபோது என்ன நடக்கும்..?'

'நிச்சயமாய் ஒரு எரிமலை வெடிக்கும்..!'

பாத்ரூமை நோக்கி நடந்துகொண்டிருந்தவள் சட்டென்று நின்றாள்.

''என்னங்க..?''

''ம்...''

''உங்க மாமா... காலையில நம்ம ரூமுக்கு வந்திருந்தாரா..?''

''இல்லையே... ஏன்..?''

''ராத்திரி நான் தூங்கின பின்னாடி வந்திருந்தாரா..?''

ராம்சேகர் ஜாக்கிரதையானான். ''இல்லையே... எதுக்காக கேட்கறே..?''

பிரமிளா திரும்பினாள்.

அவள் முகம் மாறியிருந்தது.

''உங்க மாமா நம்ம ரூமுக்கு வரலைன்னா சொல்றீங்க?''

''ஆமா...''

''அப்படீன்னா... இதெல்லாம் யார் குடிச்ச சிகரெட்..?'' பிரமிளா சுவரோரமாய் வைக்கப்பட்டிருந்த ஆஷ்ட்ரேயைக் காட்டினாள். ஆஷ்ட்ரேயைப் பார்த்த ராம்சேகரின் இதயத்தில் ஒரு பம்பர் குலுக்கல்.



லிங்கப்பா விரும்பிக் குடிக்கும் - சாக்லெட் நிற 'சான்சிலர்' சிகரெட் துண்டுகள் ஆஷ்ட்ரேக்குள் நெருக்கமாய் சிறைபட்டுக் கிடந்தன.




லாரியின் சக்கரங்களுக்கு கீழே - சிவப்பாய் - சதைக்கோளமாய் அற்புதராஜ் தெரிய - காக்கி யூனிபார்ம்கள் லாரியைச் சுற்றிலும் நின்றிருந்தார்கள்.

உதவி கமிஷனர் ராய், வசுந்தராவிடமும், கிருபாவிடமும் பேசிக்கொண்டிருந்தார்.

''நீ தப்புகாரியம் பண்ணிட்டேம்மா கிருபா... அவனை உடனடியா கணுக்காலுக்கு கீழே சுட்டு வீழ்த்திட்டு - அப்புறமா எனக்கு போன் பண்ணியிருக்கணும்...''

''அவன் இப்படி ஓடுவான்னு நான் நினைக்கலை அங்கிள். நான் எதிர்பார்க்காத சமயத்துல...''

''சரி... அந்த நீலப்பட கேசட் விவகாரம்..?''

''அது நிச்சயமா என்னை மாதிரியே இருக்கிற வேற ஒரு பொண்ணு. என்னை பிளாக்மெயில் பண்றதுக்காக... யாரோ தீட்டின திட்டம் இது...''

இன்ஸ்பெக்டர் ஒருவர் ராயிடம் வந்தார்.

''சார்...''

''எஸ்...''

''பாடி ரொம்பவும் சிதைஞ்சு போயிருக்கு. இரண்டு காலைத் தவிர உடம்பு மொத்தமும் உருக்குலைஞ்சு போயிருக்கு...''

''முகம்...''

''சதைக்குவியலுக்கு மேலே ஒரு காது மட்டும் தெரியுது.''

''கொடூரம்...''

''அப்புறம் சார்...''

''சொல்லுங்க...''

''பாடியோட மார்புப் பகுதியில் - ஒரு வீடியோ கேசட்

நொறுங்கி சதைக் குவியலுக்குள்ளே புதைஞ்சிருக்கு... பேண்டு பாக்கெட்டுக்குள்ளே - ஒரு கர்ச்சீப் மூட்டை இருந்தது. அதை பிரிச்சு பார்த்தப்ப கொஞ்சம் நகைங்க...''

ராய் வசுந்தராவிடம் திரும்பினார்.

''அது உங்க நகைங்க... இல்லையா..?''

''ஆமா...''

''பாடியை போஸ்ட்மார்ட்டம் கொண்டுபோக முடியாது. ஸ்பாட் போஸ்ட்மார்ட்டம் பண்ணிடலாமா..?''

''மார்ச்சுவரிக்கு கொண்டு போயிடலாம் சார்... போக்குவரத்து அதிகம் உள்ள ஏரியா... இப்பவே நெரிசல் ஆரம்பமாயிடுச்சு... இங்கே போஸ்ட்மார்ட்டம்ன்னா எப்படியும் ரெண்டு மூணு மணி நேரமாயிடும்...''

''கரெக்ட்..! பாடியை மார்ச்சுவரிக்கு கொண்டுபோய் - உடனே போஸ்ட்மார்ட்டத்துக்கு உட்படுத்தி ரிப்போர்ட் வாங்குங்க... நான் திருமதி வசுந்தரா, மிஸ் கிருபாகிட்டே என்கொய்ரியை முடிச்சுகிட்டு வந்துடறேன்...''

''எஸ்... ஸார்...''




'ஆஷ்ட்ரேயை கையோடு - மறக்காமல் எடுத்துக்கொண்டு போய்விடும் லிங்கப்பா நேற்று ராத்திரி மட்டும் எப்படி மறந்து போனார்..?'

ராம்சேகர் யோசித்துக் கொண்டிருக்கும்போதே - பிரமிளா கேட்டாள். ''என்னங்க... அந்த 'ஆஷ்ட்ரே'வையே வெறிச்சு பாக்கறீங்க..?''

''இது எப்படி இங்கே வந்ததுன்னு யோசிக்கிறேன்...''

''இதுல யோசிக்க என்ன இருக்கு..? உங்க மாமா நம்ம ரூமுக்கு வந்திருக்கார். சிகரெட்டோட எண்ணிக்கையை பார்க்கும்போது - அவர் இந்த ரூம்ல ரொம்ப நேரம்



இருந்திருப்பார் போலிருக்கு..! என்னங்க இதெல்லாம்..?''

''எனக்கும் ஒண்ணும் புரியலை...''

''உங்களுக்கு உண்மையாகவே புரியலையா..? இல்லே புரியாத மாதிரி நடிக்கறீங்களா..?''

''பிரமிளா என்ன சொல்றே..?''

''உங்க மாமா... நேத்து ராத்திரி... நான் தூங்கின பின்னாடி இங்கே வந்திருக்கார். ரொம்ப நேரம் இருந்திருக்கார். என்ன விஷயம்..?''

''நீ நினைக்கிற மாதிரி ஒண்ணும் இல்லை பிரமிளா... நேத்து ராத்திரி மாமா இங்கே வரலை...''

''அப்படீன்னா இந்த ஆஷ்ட்ரே மட்டும் மாடிப்படியேறி வந்ததா..?''

''பிரமிளா...! நீ எதையும் தப்பா அர்த்தம் பண்ணிக்காதே... இந்த ஆஷ்ட்ரே இங்கே எப்படி வந்ததுன்னு... நானே மாமாகிட்டே கேட்கறேன்...''

ராம்சேகர் அறையைவிட்டு வெளியேறி - மாடிப்படிகளில் வேகமாய் இறங்கி - படபடக்கிற உடம்போடு ஹாலில் நடந்து - லிங்கப்பாவின் அறைக்குள் நுழைந்தான்.

குளிக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தார் லிங்கப்பா. ராம்சேகரின் பதற்றத்தை கவனித்துவிட்டு முகம் மாறினார்.

''என்ன..?''

''எந்த ஒரு காரியத்தையும் ஒழுங்கா பண்ண வேண்டாமா..?''

''என்னாச்சு..?''

''என்னாச்சா..? நேத்து ராத்திரி முழுக்க - ரூம்ல உட்கார்ந்து - சிகரெட்டை ஊதி தள்ளினீங்களே..? கையோடு ஆஷ்ட்ரேயை திரும்பக் கொண்டு வந்தீங்களா..?''

''அடேடே..! ரூம்லேயே விட்டுட்டேன்...! பிரமிளா பார்த்துட்டாளா..?''

''பார்த்துட்டா...''

''போச்சு! என்ன சொல்லி சமாளிச்சே..?''

''என்னால ஒண்ணும் சொல்ல முடியலை... அவள்

கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல முடியாமே உங்ககிட்டே ஓடிவந்திருக்கேன்...''

''எதையாவது சொல்லி சமாளிக்க வேண்டியதுதானே..?''

''பொருத்தமா ஒண்ணும் தோணலையே..?''

''நான் சிகரெட் பிடிக்காமே இருக்கணும்ங்கிறதுக்காக... கங்கம்மா ஆஷ்ட்ரேவைக் கொண்டு போய் - உன் ரூம்ல ஒளிச்சு வைச்சுட்டதா சொல்லிடலாமா..?''

''அதை நான் நம்பணுமே..?''

அறையின் கதவருகே குரல் கேட்டு - லிங்கப்பாவும் ராம்சேகரும் திரும்பிப் பார்த்தார்கள்

பிரமிளா நின்றிருந்தாள்.




**உ**தவி போலீஸ் கமிஷனர் ராயின் அறைக்குள் நுழைந்தார் அந்த இன்ஸ்பெக்டர். ஒரு விறைப்பான சல்யூட்டை 'சுள்'ளென்று அடித்துவிட்டு நின்றார்.

''எஸ்...''

''அற்புதராஜ் போஸ்ட் மார்ட்டம் முடிஞ்சது சார்...''

''செய்தி ஏதும் உண்டா?''

''உடம்பு சதைக்கூழுக்கு நடுவே... இந்த சாவி கிடைச்சது சார்'' சொல்லிக்கொண்டே பாலிதின்பேப்பரில் சுற்றி வைத்திருந்த - சாவியை ராயிடம் நீட்டினார் இன்ஸ்பெக்டர். ராய் வாங்கிப் பார்த்தார்.

சாவியோடு இணைத்திருந்த சிறிய பித்தளை தகட்டில் - HOTEL NEELA ROOM NO:509 என்கிற வாசகம் பதிக்கப்பட்டிருந்தது.

ராய் நிமிர்ந்து இன்ஸ்பெக்டரை ஏறிட்டார். ''அப்படின்னா அற்புதராஜ் இந்த ஓட்டல் நீலாவில்தான் ரூம் எடுத்து தங்கியிருந்திருக்கான்.''

''ஆமா... சார்...''

''அந்த ஓட்டலுக்கு போன் பண்ணி கேட்டீங்களா?''



''கேட்டேன்.''

''அடுத்த நடவடிக்கை என்ன..?''

''அவன் தங்கியிருந்த அறையை கிளறிப் பார்க்கணும்.''

ராய் எழுந்து கொண்டார். ''நானும் வருகிறேன்...'' மேசைமேலிருந்த தொப்பியை எடுத்து பொருத்திக் கொண்டு - இன்ஸ்பெக்டரை முன்னால் நடக்கவிட்டு - ஜீப்புக்கு வந்தார்.

பதினைந்து நிமிட பயணம்.

கல்கத்தாவின் நெரிசலில் சிக்காமல் - கொஞ்சம் ஒதுங்கியிருந்த ஓட்டல் நீலாவின் - ஐந்து மாடி கட்டிடத்தின் முகப்பில் வந்து நின்றது ஜீப். ராயும் இன்ஸ்பெக்டரும் இறங்கி உள்ளே போனார்கள். வரவேற்பு கவுண்ட்டரில் இருந்த இளைஞனை நெருங்கினார்கள். ராய் கேட்டார்.

''ரூம் நம்பர் 509-ல் யார் தங்கியிருக்காங்க?''

அவன் லெட்ஜரைப் பார்த்துவிட்டு ''அற்புதராஜ்'' - என்றான்.

''முகவரி..?''

''நம்பர் 14, மிண்ட் சாலை... சென்னை.''

''கல்கத்தாவுக்கு எதுக்காக... வந்தேன்னு போட்டிருக்கார்..?''

''தொழில்...''

''என்ன தொழில்..?''

''தெரியலை...''

''இந்த அற்புதராஜ் உங்க ஓட்டலுக்கு அடிக்கடி வர்றவரா..?''

''இல்லை... இதுதான் முதல் தடவை...''

''எத்தனை நாளா தங்கியிருக்கார்..?''

''இன்னிக்கு மூணாவது நாள்...''

''அவர் தங்கியிருந்த இந்த மூணு நாட்களில் அவரைப் பார்க்கிறதுக்கு யாராவது வந்தாங்களா..?''

''யாரும் வரலை...''

''அவரோட ரூமை சோதனை போடணும்...''

''எதுக்காகன்னு தெரிஞ்சுக்கலாமா, சார்..?''

''அப்புறம் சொல்றேன்... கூட வாங்க...''

ஐந்தாவது மாடிக்குப் போனார்கள். அறை எண்

509-க்கு முன் நின்று அதன் லாக்கிற்கு சாவியைக் கொடுத்து நெம்பினார் ராய்.

கதவு பின்வாங்க -

உள்ளே போனார்கள்.

கட்டிலின் மேல் ஒரு சிறிய சூட்கேஸ். ஹாங்கரில் ஒரு பேண்டும் சர்ட்டும். மற்றபடி அறை சுத்தமாய் இருந்தது.

ராய் இன்ஸ்பெக்டருக்கு கண்ணைக் காட்ட - சூட்கேஸ் உடைபட்டது. உள்ளே விசேஷமாய் ஏதுமில்லை. இரண்டு செட் டிரஸ், நான்கைந்து வார இதழ்கள். ஷேவிங் செட், ஒரு பாக்கெட் டிரான்சிஸ்டர், குளிர் கண்ணாடி, சீல் உடைக்காத குவார்ட்டர் விஸ்கி பாட்டில், ஒரு டார்ச்.

இன்ஸ்பெக்டர் உதட்டைப் பிதுக்கினார்.

''ஒரு பிரயோஜனமும் இல்லையே...''

''லெட்ஜரில் இருக்கிற சென்னை அட்ரஸ் உண்மையா... பொய்யான்னு கண்டுபிடிக்கணும்...''

''அதை உடனே கண்டுபிடிச்சுடலாம் சார்.''

ராய் வரவேற்பு இளைஞனிடம் திரும்பினார். ''அற்புதராஜ் இங்கே தங்கியிருந்தபோது - அவருக்கு வெளியிலிருந்து ஏதாவது போன் கால் வந்ததா..?''

''அவருக்கு கால்ஸ் வரலை சார்... ஆனால்... இவர் 'கால்' புக்பண்ணி பேசினார்...''




**ரா**ம்சேகரும், லிங்கப்பாவும் ஸ்தம்பித்துப் போய் - அறை வாசலில் நின்றிருந்த பிரமிளாவைப் பார்த்தார்கள்.

''பிரமிளா...''

ராம்சேகர் திணறலாய் கூப்பிட - அவள் அவனிடம் திரும்பினாள். ''இந்த வீடு சரியில்லை... நீங்க... உங்க மாமா... அத்தை... மூணுபேர்கிட்டேயும் என்னவோ தப்பு இருக்கு... அந்த தப்பு என்னாங்கிறதை எனக்கு சொல்றீங்களா...?''

''பிரமிளா... அ... அது... வந்து...''

''ம்... சொல்லுங்க...''



''நீ... நினைக்கிற மாதிரி... இந்த வீட்ல எந்த தப்பும் இல்லை...''

''அப்படீன்னா அந்த ஆஷ்ட்ரே... நம்ம ரூமுக்கு எப்படி வந்தது..? இவர் நிஜமாவே உங்க மாமாதானா..? நேத்து ராத்திரி முழுக்க நம்ம ரூம்ல உட்கார்ந்து இவர் சிகரெட்டை ஊதித் தள்ளினதா... கொஞ்ச நேரத்துக்கு முந்திதானே சொன்னீங்க..? புருஷன் பெஞ்சாதி இருக்கிற ரூம்ல இவர்க்கென்ன வேலை..? என் மனசுக்குள்ளே இப்போ ஏதேதோ சந்தேகம் வருது... நேத்து ராத்திரி எனக்கு பக்கத்துல படுத்திட்டிருந்தது... நீங்களா... இவரா..?''

ராம்சேகர் சிறினான். ''பிரமிளா! அறிவுகெட்டத்தனமா எதையாவது பேசிட்டிருக்காதே...''

''இல்லீங்க... இந்த வீடு சரியில்லை... உங்க பேச்சும் நடவடிக்கைகளும் எனக்கு பயமாயிருக்கு... நான் இனிமே இங்கே இருக்கமாட்டேன்... கிளம்பறேன்...'' - சொன்னவள் விருட்டென்று வாசலை நோக்கி நடக்க - லிங்கப்பா கத்தினார்.

''ராம்சேகர்... அவளை விடாதே... பிடி...''

அவன் பாய்ந்து போய் பிரமிளாவின் புஜத்தைப் பற்றினான்.

''நில்லு பிரமிளா...''

''நான் நிக்கமாட்டேன்... எனக்கு இந்த வீட்ல இருக்க பயமாயிருக்கு... நான் ஊருக்கு கிளம்பறேன்... நீங்க வேணும்னா... இங்கே இருந்துட்டு வாங்க...''

''பேசாமே மாடிக்கு வா...''

''நான் வரமாட்டேன்...''

''அந்த ஆஷ்ட்ரே நம்ம ரூமுக்கு எப்படி வந்ததுங்கிறதை நான் சொல்றேன்.''

''நீங்க எதைச் சொன்னாலும் நான் நம்பமாட்டேன்...''

பக்கவாட்டு அறையிலிருந்து கங்கம்மா புன்னகையோடு வெளிப்பட்டாள். ''ராம்சேகர்! இனிமே அவளை சமாதானப்படுத்த முடியாது... உன்னோட முரட்டுத்தனத்தைக் காட்டி - மேலே கொண்டு போய் கட்டிப்போடு... இவளை என்ன பண்றதுன்னு பின்னாடி யோசிச்சுக்கலாம்...''

ராம்சேகர் பிரமிளாவின் இரண்டு தோள்பட்டைகளையும் இறுக்கிப் பிடித்து சுலபமாய் தூக்கிக் கொண்டு - மாடிப்படிகளில் ஏற ஆரம்பித்தான்.

''ச்சீ..! விடுங்க...''

''கத்தாதே...''

அவள் திமிறினாள்.

''நீங்க என்ன மனிதனா...? மிருகமா..?''

''நீ எப்படி வைச்சுக்கிட்டாலும் சரிதான்...''

''நீங்க என்னை ஏமாத்திட்டீங்க...''

''இருக்கட்டும்...''

''ச்சீ... விடு...''

அவளுடைய திமிறலை பொருட்படுத்தாமல் - மாடிப்படிகளில் ஏறி உச்சிக்கு வந்தான்.

அவன் உச்சிப்படியைத் தொட்ட விநாடி -

பிரமிளா - ராம்சேகரின் மணிக்கட்டை தன் முன்பற்களால் கவ்வி - பலங்கொண்ட மட்டும் கடித்தாள்.

''ஷ்... ஷ்.... ஷ்... ஆ... ஆ... ஆ...''

வலி பொறுக்கமாட்டாத ராம்சேகர் - அவளைக் கீழே நழுவவிட்டு - பின் எழ முயன்ற அவளை - ஆத்திரம் தாளாமல் எட்டி உதைத்தான். ''சகக்க்க்க்...''

அடிவயிற்றில் உதைபட்ட பிரமிளா உச்சிப்படியினின்றும் உருள ஆரம்பித்தாள். தலை படிகளின் முனைகளில் 'நெக் நெக்'கென்று இடிபட்டு ரத்தத்தை சிதறவிட்டபடியே - மாடிப்படிகளின் அடிவாரத்துக்கு வந்தாள்.




ராய் கேட்டார். ''அற்புதராஜ் டிரங்க்கால் போட்டு பேசினாரா..?''

''ஆமாம்'' - என்றான் வரவேற்பு இளைஞன்.

''எந்த ஊருக்கு..?''

''பெங்களூர்...''

''டெலிபோன் நம்பர்..?''

''டிரங்க்கால் ரெஜிஸ்டரில் பதிவு



பண்ணி வைச்சிருக்கோம்...'' சொன்ன இளைஞன் - அறைக்கு வெளியே நின்றிருந்த ஒருவரை அனுப்பி - ரெஜிஸ்டரை கொண்டு வரச்சொல்லி புரட்டிப் பார்த்தபின் சொன்னான்.

''643317.''

''பி.பி. காலா..? நம்பர் காலா..?''

''நம்பர் கால்...''

ராய் டெலிபோன் நம்பரைக் குறித்துக் கொண்டார். பின் நிமிர்ந்தார்.

''இன்ஸ்பெக்டர்...''

''சார்...''

''பெங்களூர் போலீஸ் தலைமை ஆபீசோடு உடனடியா தொடர்பு கொண்டு - இந்த டெலிபோன் எண்ணுக்குரிய - வீட்டை 'ரவுண்ட்-அப்'புக்கு உட்படுத்தி ஒரு கிளீயர் 'ரைட்' நடத்தச் சொல்லுங்க...''

''எஸ்... சார்...''

''உடனடியாக நடந்தாகணும்...''

இன்ஸ்பெக்டர் அறையைவிட்டு வேகமாய் வெளியேறினார்.

ராய் அங்கிருந்த டெலிபோனில் - கிருபாவின் வீட்டுக்கு தொடர்பு கொண்டு பேசினார். ''கிருபா! கேஸ் சீக்கிரமே முடிவுக்கு வந்துடும்.''

''தடயம் ஏதாவது கிடைச்சுதா அங்கிள்..?''

''கிடைச்சிருக்கு... அற்புதராஜ் பெங்களூரில் இருக்கிற ஒரு டெலிபோன் நம்பருக்கு டிரங்க்கால் போட்டு பேசியிருக்கான்... அநேகமா பெங்களூர்தான் இந்த திட்டத்துக்கு 'ஆணிவேர்'ன்னு நினைக்கிறேன்... கர்நாடக போலீஸ் தலைமைக்கு தகவல் போயிருக்கு... இன்னும் ஒரு மணி நேரத்துல... அங்கிருந்து பதில் கிடைக்கும்...




மாடிப்படிகளின் அடிவாரத்திற்கு - பிரமிளா ரத்தமாய் வந்து சேர்ந்த அதே விநாடி -

வெளியே -
போர்டிகோவில் அந்த இரைச்சல் சத்தம் கேட்டது.

லிங்கப்பா ஓடிப்போய் - ஹாலின் பக்கவாட்டு சன்னல் வழியே - போர்ட்டிகோவை எட்டிப் பார்த்து அதிர்ந்தார்.

இரண்டு போலீஸ் ஜீப்புகள். ஒரு வேன். வேனின் வயிற்றிலிருந்து கான்ஸ்டபிள்கள் சடசடவென இறங்க - ஜீப்பிலிருந்து பெங்களூர் எஸ்.பி., டி.எஸ்.பி. தொப்பிகளை கழற்றிக் கொண்டு கீழே குதித்தார்கள்.

லிங்கப்பா அறைக் கதவை சாத்தி தாழிட முயல - கான்ஸ்டபிள்கள் அவரைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனார்கள்.

டி.எஸ்.பி. ரத்த வெள்ளத்தில் கிடந்த பிரமிளாவை நோக்கிப் போக - எஸ்.பி., லிங்கப்பாவை எதிர்கொண்டு - கையிலிருந்த சர்ச் வாரண்டை காட்டினார்.

''உங்க வீட்டை சோதனை போடணும்...''

''எ... எதுக்கு சார்..?''

''கல்கத்தாவில் பிடிபட்ட உங்க அற்புதராஜ்... நீங்க பண்ற பிசினஸ்சைப் பத்தி சொல்லிட்டான்...''

கங்கம்மா அவளையும் அறியாமல் கீறிட்டாள்.

''அடப்பாவி..! உன்னை நம்பினதுக்கு... கழுத்தை அறுத்திட்டியேடா...''

கங்கம்மாவைப் பார்த்து - எஸ்.பி. புன்னகைத்தார்.

''அப்படின்னா... அற்புதராஜ் யாருன்னு உங்களுக்குத் தெரியும்...?''

டி.எஸ்.பி. ஓடி வந்தார்.

''சார்... அந்தப் பொண்ணுக்கு ஏகப்பட்ட இரத்தம் வெளியேறி இருக்கு...''

''ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிடுங்க... நான் இங்கே 'ரெய்டை' நடத்திட்டு ஆஸ்பத்திரிக்கு வந்துடறேன்...''

''எஸ்... சார்...''

பிரமிளாவை தூக்கிக்கொண்டு - இரண்டு கான்ஸ்டபிள்கள் ஜீப்புக்கு போய்க்கொண்டிருக்க - டி.எஸ்.பி. தொடர்ந்தார்.



லிங்கப்பா, ராம்சேகர், கங்கம்மா மூன்று பேரும் சுவரோரமாய் நிறுத்தப்பட்டு எஸ்.பி.யால் விசாரிக்கப்பட - கான்ஸ்டபிள்கள் வீட்டின் எல்லா அறைகளையும் குடைந்தார்கள். ரகசிய இடங்களிலிருந்து கேஸட்டுகள் கிடைக்க ஆரம்பித்தன.

அடுத்த அரைமணி நேரத்தில் - நூற்றுக்கணக்கில் கொண்டு வந்து - சோபாவில் கொட்டினார்கள். கேசட்டுகளின் மேல் சங்கேதக் குறிகள். சில கேசட்டுகளின்மேல் 'பிரமிளா"என்று எழுதப்பட்டிருக்க - எஸ்.பி. அவைகளை லிங்கப்பாவிடம் காட்டி கேட்டார்.

''அந்தப் பொண்ணை உபயோகப்படுத்தி எடுக்கப்பட்ட கேசட்டுகள் இது... இல்லையா..?''

லிங்கப்பா 'ஆமாம்' என்கிற மாதிரி தலை குனிந்தார். எஸ்.பி. தன் கையிலிருந்த லாட்டியால் - அவர் முகத்தை நிமிர்த்தினார். ''சமுதாயத்தில் பெரிய மனிதன் மாதிரி வேஷம் போட்டுக்க வேண்டியது. திரைக்குப் பின்னாலே கீழ்த்தரமான வேலைகளைப் பண்ண வேண்டியது. சகோதரிகளா நினைக்க வேண்டிய பெண்களை... இப்படி காட்சிப் பொருளாக்கி - நீலப்படங்கள் எடுக்கறீங்களே... நிஜமாவே நீங்க ஒரு பொண்ணோட வயித்துலதான் பிறந்தீங்களா..? இந்த ஈனத்தனமான தொழிலைப் பண்ணி - கார், பங்களா சகிதம் வாழறதைவிட - பிச்சையெடுத்து வாழறது எவ்வளவோ நல்ல தொழில்...''

''ச... சார்... வந்து...''

எஸ்.பி. கையமர்த்தினார்.

''எனக்கு வேண்டியது சமாதானமில்லை... உண்மையான தகவல்கள். உங்க தொழில் பார்ட்னர்ஸ் யாரு..? எந்தெந்த மாநிலத்தில் உங்களுக்கு வியாபாரங்கள்? இந்த படங்களில் நடிச்ச ஆட்கள் யாரு..? - இந்த கேள்விகளுக்கெல்லாம்... உண்மையான பதில்கள் வேணும்... ஒரு பொய் சொன்னாலும் சரி... இந்த லாட்டி இரண்டா உடைஞ்சுடும்.''

லிங்கப்பா கையெடுத்து கும்பிட்டார்.

''எல்லாத்தையும் சொல்லிடறேன் சார்...''




கல்கத்தாவிலிருந்து விமானம் மூலமாக பெங்களூர் வந்து சேர்ந்த ராய், வசுந்தரா, கிருபா, லட்சுமணை - ஏர்-போர்ட்டில் வரவேற்று - ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போனார் எஸ்.பி.

ராய் கேட்டார். ''பிரமிளா... இப்போ எப்படியிருக்கா..?''

''ஆபத்தான கட்டத்தை இன்னும் தாண்டலை...''

''அந்தப் பொண்ணு - கிருபா மாதிரியே இருக்காளா..?''

''தொண்ணூறு சதவீதம்...''

''ஆச்சரியமாயிருக்கு... இது எப்படி..? சினிமாவிலதான் இப்படியெல்லாம் வரும்னு கேள்விப்பட்டிருக்கேன்...''

''அந்த கேஸட்டையெல்லாம் அழிச்சிட்டீங்களா..?''

''கேஸ் முடிஞ்சு குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைச்ச பின்னாடி... எல்லா கேஸட்டுகளையும் பெட்ரோல் ஊத்தி கொளுத்திடுவோம்...''

ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தது கார்.

இறங்கி உள்ளே போனார்கள்.

டி.எஸ்.பி. தலைமை டாக்டரோடு வந்துகொண்டிருந்தார். முகத்தில் இருள்.

நின்றார்கள்.

டாக்டர் பெருமூச்சுவிட்டார். ''பிரமிளாவை காப்பாற்ற முடியலே... பாடி மார்ச்சுவரியில் இருக்கு...''

எல்லாரும் திக்கித்துப்போய் நிற்க - இனம் தெரியாத ஒரு உணர்வால் உந்தப்பட்ட கிருபா மட்டும் - முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக்கொண்டு - முதுகு குலுங்க அழ ஆரம்பித்தாள்.

**(முடிந்தது)**




## ரிலாக்ஸ் ப்ளீஸ்...

## அ(றி)வியல் போட்டி - 20

**லண்டன் தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு பொறுப்பேற்றுக் கொண்ட தீவிரவாத அமைப்பு எது?**

விடையை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி 10.08.2005க்குள் அனுப்புங்கள்.

முகவரி:

**அ(றி)வியல் போட்டி -20**
**க்ரைம் நாவல், ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

**அ(றி)வியல் போட்டி - 19ன் விடை**

**பாகிஸ்தான்**

**சரியான விடையெழுதியவர்களில்**
**க்ரைம் நாவல் ஸ்பெஷல்**
**பரிசு பெறும் 10 பேர்**

ராம. சிகப்பி ஆச்சி - திருச்சி, பி.ராஜசேகர் - கோவை, எஸ்.அருண் - பூண்டி புஷ்பம் கல்லூரி, ஆர்.நிர்மலா - திருவண்ணாமலை, கே.ரமேஷ்குமார் - ஈரோடு, எஸ்.ஜே.சுவர்ணலட்சுமி - சென்னை-45, எஸ்.நூருல்ஹமீத் - தூத்துக்குடி, ஜி.மனோகரன் - விழுப்புரம், பொன்.ராஜ்குமார் - ஊத்தங்கால், ஆர்.எம்.மகாதேவன் - நெரிஞ்சிப்பேட்டை.